பொது சன நூலகம்
யாழ்ப்பாணம்
நல்லூர் - இளைஞர் நூலகம்

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 6 00

சுடர் 11 வள்ளுவர் ஆண்டு 2027 புரட்டாதி 29 செவ்வாய்க்கிழமை (15-10-1996) UTHAYAN A Lively National Tamil Daily கதிர் 241

## மத்திய வங்கிக் குண்டு வெடிப்பில் பிரபா மீது வழக்குத் தாக்கல்!

கொழும்பு, ஒக். 15

கடந்த ஜனவரி மாதம் 30 ஆம் திகதி நடந்த மத்திய வங்கிக் குண்டு வெடிப்புச் சம்பவம் தொடர்பாக விடுதலைப் புலிகள் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரன் மீதும் மற்றும் 9 பேர் மீதும் நேற்று குற்றப் பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டது.

பயங்கரவாத தடைச் சட்டத்தின் கீழ் சட்டமா அதிபர் குற்றப் பத்திரிகையைத் தாக்கல் செய்தார்.

குற்றஞ்சாட்டப்பட்ட ஏனையோரில் பொட்டு அம்மானும், சாள்ஸ் மாஸ்டரும் அடங்குகின்றனர் என்று இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம் தெரிவித்தது.

கொலை, பாரதூரமான காயம் விளைவித்தமை, பல நூறு கோடி ரூபா சேதம் விளைவித்தமை உட்பட மற்றும் பல குற்றங்கள் கொண்ட குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

கொழும்பில் உள்ள ஆறு மேல் நீதிமன்றங்களில் எதனதும் பெயர் குறிப்பிடப்படாமல் குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டுள்ளதால்—

ஏதாவது ஒரு மேல் நீதிமன்றம் சந்தேக நபர்களுக்கு

(8 ஆம் பக்கம் பார்க்க)

### துப்பாக்கி சூட்டில் மீனவர் காயம்

கடலில் துப்பாக்கிச் சூட்டுக்குள்ளான இளைஞர் ஒருவர் காயங்களுடன் மந்திகை அரசினர் ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

அல்வாய் வடக்கு சக்கோட்டையைச் சேர்ந்த அன்ரன் ஜெயக்குமார் (23வயது) என்ற இளைஞரே காயம் அடைந்தவர் ஆவார்.

இவர் தாமும் மற்றும் இருவருமாக மூவர் கடந்த 12ஆம் திகதி காலை மீன் பிடிக்கச் சென்ற போது துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்கானதாகவும், பின்னர் படையினரால் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டதாகவும் தெரிவித்தார்.

# புலிகளுக்கு எதிரான யுத்தத்திலே இலங்கைக்கு இந்தியா உதவாது!

## ஒரு முறை பட்டது போதும் என்கிறார் குஜ்ரால்



குஜ்ரால்

புதுடில்லி, ஒக்ரோபர் 15

இலங்கையில் தற்போது நடைபெற்றுவரும் விடுதலைப் புலிகளுக்கு எதிரான யுத்தத்தில் இலங்கை அரசுக்கு இந்தியா உதவமாட்டாது என்று இந்திய வெளிவிவகார அமைச்சர் இந்திரகுமார் குஜ்ரால் புதுடில்லியில் நேற்று நடைபெற்ற கருத்தரங்கு ஒன்றில் தெரிவித்தார். ''நாங்கள் இலங்கையில் ஒரு தடவை தலையிட்டு அனுபவத்தைப் பெற்று விட்டோம். எனவே மீண்டும் இந்த விவகாரத்தில் இனித் தலையிடமாட்டோம்'' என்று அவர் கூறினார்.

''இந்தியாவின் வெளியுறவுக் கொள்கை'' என்னும் தலைப்பில் குஜ்ரால் நேற்று இந்தக் கருத்தரங்கில் உரை நிகழ்த்தினார்.

1987 ஆம் ஆண்டு இந்தியா தனது படைகளை இலங்கைக்கு அனுப்பியது. ஆயிரத்து 200 பேரைப் பலி கொடுத்த பின்னர் 1990ஆம் ஆண்டில் அது படைகளை திருப்பி அழைத்துக்கொண்டது.

மறுபடியும் இந்த விவகாரத்தில் தலையிட இந்தியா தயாரில்லை என்றும் அவர் கூறினார்.

அயல் நாடுகளுடன் நல்லுறவைப்பேணும் நடவடிக்கையின் ஓர் அங்கமாகவே இம்மாதம் 24 ஆம் திகதி தாம் இலங்கைக்கு விஜயம் செய்வதாகவும் —

(8 ஆம் பக்கம் பார்க்க)

## புலிகள் தமிழர்களின் பிரதிநிதிகள் அல்லர்

### லக்ஷ்மன் கதிர்காமர் கூறுகிறார்

கொழும்பு, ஒக். 15

விடுதலைப் புலிகள் தமிழ் மக்களைப் பிரதிநிதித்துவப்படுத்தவில்லை — தமிழ் மக்களின் பிரதிநிதிகள் விடுதலைப் புலிகள் என எவராலும் கூறமுடியாது—தமிழ் மக்களின் பிரதிநிதிகள் தாங்கள் தானா என்பதை அவர்கள் ஒருபோதும் பரீட்சித்துப் பார்க்கவில்லை.

பி.பி.ஸி தென்கிழக்காசிய சேவைக்கு அளித்த பேட்டியில் வெளிவிவகார அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர் மேற்கண்டவாறு கூறினார்.

(8 ஆம் பக்கம் பார்க்க)

### ஜே. ஆருக்கு மாரடைப்பு

முன்னாள் ஜனாதிபதி ஜே ஆர். ஜெயவர்த்தனா மாரடைப்புக் காரணமாக கொழும்பிலுள்ள தனியார் மருத்துவமனை ஒன்றில் நேற்று அனுமதிக்கப்பட்டார்.

கடந்த டிசம்பர் மாதம் 17ஆம் திகதி தனது 90ஆவது வயதைப் பூர்த்தி செய்த ஜே. ஆர். ஜெயவர்த்தனா இந்த நாட்டின் முதலாவது நிறைவேற்று ஜனாதிபதி என்பது குறிப்பிடத்தக்கது.

## பிரபா மீதான வழக்கு சமாதானத்துக்கு இடைஞ்சல்

### தொண்டமான் கருத்து

லண்டன், ஒக். 15

இன்று நாட்டுக்குத்தேவையானது சமாதானம். பிரபாகரன் மீது வழக்குத் தாக்கல் செய்யும் நடவடிக்கை சமாதானத்துக்கு இடைஞ்சலாக இருக்கும் என நினைக்கிறேன்.

இப்படிக் கூறியுள்ளார் அமைச்சரும், இ.தொ.கா. தலைவருமான எஸ். தொண்டமான்.

பி. பி. ஸிக்கு கருத்து வெளியிடுகையில் அவர் மேலும் கூறியதாவது:-

இன்றுள்ள நிலையில் இந்த நடவடிக்கை சமாதானத்துக்கு முட்டுக்கட்டையாக இருக்கும் எனக் கருதுகிறேன்.

அரசியல் முயற்சிக்கான நடவடிக்கைகளை இது நிச்சயமாகப் பாதிக்கும்.

இன்றுள்ள நிலையில் விடுதலைப்புலிகளும், அரசாங்கமும் மனம் விட்டுப் பேசினால்தான் சமாதானத்தைக் கொண்டு வர முடியும்.

அப்படியிருக்கும் போது ஒரு குறிப்பிட்ட சம்பவத்தை

(8ஆம் பக்கம் பார்க்க)

## வீடியோ படம் பார்க்கச்சென்ற இரு இளைஞர்கள் சூடுபட்டு மரணம்

### உடுப்பிட்டிப் பகுதியில் சம்பவம்

வடமராட்சி, ஒக். 15

வீடியோப் படம் பார்க்கச் சென்றதாகக் கூறப்படும் இரு இளைஞர்கள் துப்பாக்கியால் சுடப்பட்டு மரணமானார்கள்.

ஊரடங்கு நேரம் உடுப்பிட்டியில் இடம்பெற்றதாகத் தெரிவிக்கப்படும் இச் சம்பவத்தில் உடுப்பிட்டி இலகடியைச் சேர்ந்த கலாநிதி குணரட்ணம் (22வயது) என்ற ஒரு பிள்ளையின் தந்தையும், திருமணம் முடித்து ஆறு மாதங்களான பொன்னுத்துரை சின்னத்துரை (21வயது) என்பவருமே மரணமானவர்களாவர்.

இவர்களில் குணரட்ணம் பலாலியைச் சேர்ந்தவர் என்றும், சின்னத்துரை கோண்டாவிலைச் சேர்ந்தவர் என்றும் இருவரும் உடுப்பிட்டி இலகடியில் திருமணம் செய்தவர்கள் என்றும் மரண விசாரணையில் தெரிவிக்கப்பட்டது.

இந்த இரு இளைஞர்களின்

(8 ஆம் பக்கம் பார்க்க)

## புலிகளின் பேச்சாளர் கருத்துக் கூற மறுப்பு

லண்டன், ஒக்ரோபர் 15

விடுதலைப் புலிகள் தலைவர் பிரபாகரன் மீது இலங்கை அரசு குற்றப் பத்திரிகை தாக்கல் செய்தது குறித்து விடுதலைப் புலிகளின் சர்வதேசப் பேச்சாளர் லோறன்ஸ் திலகருடன் பி.பி. ஸி. தொடர்பு கொண்டு கருத்துக் கேட்டது என்றும் —

ஆனால் கருத்து எதுவும் கூற அவர் மறுத்து விட்டார் என்றும் பி. பி. ஸி. தெரிவித்தது. (இ-3)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வடபிராந்திய போக்குவரத்துச் சபை பஸ் கட்டணம் இன்று முதல் உயர்வு

யாழ்ப்பாணம் ஒக். 15

வடபிராந்திய போக்குவரத்துச் சபை இன்று முதல் தனது பேருந்துகளின் பயணக் கட்டணங்களை உயர்த்தியுள்ளது.

இந்தக் கட்டண உயர்வு தொடர்பாக போக்குவரத்துச் சபை பொது முகாமையாளர் திரு. வி. எஸ். சொக்கலிங்கம் நேற்று செய்திக் குறிப்பு ஒன்றை விடுத்தார்.

யாழ்ப்பாணத்தில இருந்து குறிக்கப்பட்ட இடங்களுக்கான புதிய கட்டண விவரம் வருமாறு:-

- ★ ஊர்காவற்றுறை—11.50
- ★ சாவகச்சேரி—6.50
- ★ கொடிகாமம்—8.00
- ★ மாதகல்—9.00
- ★ குறிகட்டுவான்—12.50
- ★ பருத்தித்துறை—12.00
- ★ அச்சுவேலி—8.00
- ★ புன்னாலைக்கட்டுவன்—4.50
- ★ பளை—11.50

# மூளாய் ஆஸ்பத்திரி மீண்டும் இயங்குகிறது

## நேற்று வைபவ ரீதியாக ஆரம்பம்

மூளாய் கூட்டுறவு வைத்தியசாலை நேற்று வைபவ ரீதியாக மீண்டும் தனது சேவையை ஆரம்பித்துள்ளது.

சுமார் ஒரு வருட காலமாக இயங்காதிருந்த இந்த வைத்தியசாலை நேற்றுக் காலை சங்கானை உதவி அரசாங்க அதிபர் பணிமனை நிர்வாக உத்தியோகத்தர் எஸ். புத்திரசிகாமணியால் திறந்து வைக்கப்பட்டது.

ஆரம்பத்தில் வெளிநோயாளர் பிரிவில் மட்டுமே சிகிச்சை ஆரம்பிக்கப்பட்டுள்ளது. படிப்படியாக உள்நோயாளர் பகுதி, பிரசவ விடுதி, சத்திர சிகிச்சைப் பிரிவு, எக்ஸ்றே பிரிவு என்பன காலக்கிரமத்தில் இயங்கத் தொடங்கும் எனத் தெரிவிக்கப்பட்டது.

வைத்தியசாலை வெளிநோயாளர் பிரிவு நேற்றுக் காலை 9.30 மணியளவில் திறக்கப்பட்டதும் —

நோயாளர்கள் பலர் அங்கு சிகிச்சை பெற்றதைக் காண முடிந்தது. நோயாளரிடம் குறைந்த கட்டணமே அறவிடப்பட்டதையும் அவதானிக்க முடிந்தது.

வைத்திய ஆலோசனைக்குக் கட்டணமின்றி மருந்துக்கு மட்டுமே கட்டணம் அறவிடப்படுவதாகத் தெரிவிக்கப்பட்டது.

நேற்றைய ஆரம்ப நிகழ்வின் போது, மூளாய் கூட்டுறவு வைத்தியசாலைச் சங்கப் பணிப்பாளர் சபையின் உறுப்பினர்கள் மற்றும் கூட்டுறவுத் துறையைச் சேர்ந்த அதிகாரிகள் வைத்தியசாலைப் பணியாளர்கள் உட்படப் பல பிரமுகர்கள் கலந்து கொண்டனர். (அ-145)

## மீன் விலை வீழ்ச்சி

தென்மராட்சி ஒக். 15

சாவகச்சேரிச் சந்தையில் மீனின் விலை வீழ்ச்சி அடைந்துள்ளது. (இ-117)

## நயினையில் நவராத்திரி

யாழ்ப்பாணம், ஒக். 15

அறுபத்து நான்கு சக்தி பீடங்களில் ஒன்றாகப் போற்றப்படும் வரலாற்றுப் புகழ் மிக்க நயினாதீவு ஸ்ரீ நாகபூஷணி அம்மன் ஆலயத்தில் நவராத்திரி விழா ஆரம்பமாகி சிறப்பாக நடைபெற்றுக் கொண்டிருக்கிறது.

நாளாந்தம் பகல் எழுந்தருளி அம்பாளுக்கு 108 சங்காபிஷேகமும், மூல மூர்த்திக்கு உருத்திராபிஷேகமும் நடைபெற்று விசேட பூசைகள் நடைபெறுகின்றன. மாலையில் ஸ்ரீ சக்கர பூசையுடன் விசேட ஆராதனைகளும் நடைபெற்று வருகின்றன. (அ)

## தென்மராட்சியில் மரம் தறிப்பு

தென்மராட்சி, ஒக். 15

மிருசுவில் தொடங்கி பளை வரையிலுள்ள பகுதியில் குடியிருப்புகள் இல்லாத காணிகளில் உள்ள மரங்கள் இனந் தெரியாதோரால் வெட்டி எடுத்துச் செல்லப்படுகின்றன.

வீதி ஓரத்தில் உள்ள மரங்கள் தறிக்கப்படுவதை சாதகமாகப் பயன்படுத்தி குடியிருப்புகள் இல்லாத காணிகளில் உள்ள மரங்களையும் இவர்கள் தறித்து விறகுக்காக எடுத்துச் செல்வதாகத் தெரிவிக்கப்படுகின்றது. (இ-117)

# பளை ஓய்வூதியர்களின் ஓகஸ்ட், செப். ஓய்வூதியம்

தென்மராட்சி, ஒக். 15

கிளிநொச்சி மாவட்ட செயலக ஓய்வூதியப் பிரிவில் ஓய்வூதியம் பெற்ற பளைப் பிரதேச ஓய்வூதியர்களின் ஓகஸ்ட், செப்ரெம்பர் மாதங்களுக்குரிய ஓய்வூதியம் நேற்று பளைப் பிரதேச செயலகத்தில் வழங்கப்பட்டது.

கிளிநொச்சி ஓய்வூதியப் பகுதியினரால் அனுப்பப்பட்ட காசோலைகளை இங்குள்ள வங்கி ஏற்க மறுத்ததால் பிரதேச செயலர் பா. செந்தில்நந்தனன் யாழ். அரச அதிபருடன் தொடர்பு கொண்டு இக் காசோலைகளுக்குரிய தொகை யாழ். செயலகத்தில் பெறப்பட்டு ஓய்வூதியர்களுக்கு வழங்கப்படுவதாகத் தெரிவிக்கப்பட்டது.

கிளிநொச்சி செயலகத்தினால் ஓகஸ்ட், செப்ரெம்பர்

(8 ஆம் பக்கம் பார்க்க)

# மரண அறிவித்தல்கள்

## செபமாலை ஞானப்பிரகாசம்

இணுவில் மேற்கைச் சேர்ந்த செபமாலை ஞானப்பிரகாசம் 13-10-96 இல் காலமாகி விட்டார்.

இவர் காலஞ்சென்ற ஞானம்மாவின் கணவரும், ஞானசறோஜினி, மேரிஞானறோஸ், சுசிலாதேவி, ஞானச்சந்திரன், தேவச்சந்திரன், ஞானரஞ்சிதம், ஞானசுலோஜனா ஆகியோரின் தந்தையும், செல்லப்பா, ஜெயரத்தினம், பரம்சோதி, றோஸ், சந்திரா, லிங்கநாதன், மகேந்திரராஜா ஆகியோரின் மாமனுமாவார்.

அன்னாரின் பூதவுடல் 14.10.96 இல் நல்லடக்கம் செய்யப்பட்டது. இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
எம் ஜி. ஜெயரத்தினம்
(ஸ்கந்தவரோதயாக் கல்லூரி)

(43190)

## பொன்னம்பலம் தியாகராசா
(அழகர்)

இணுவிலைப் பிறப்பிடமாகக் கொண்ட பொன்னம்பலம் தியாகராசா (அழகர்) கொழும்பில் 13-10-96 அன்று மாரடைப்பினால் காலமானார்.

அன்னார் சிவபாக்கியத்தின் அன்புக் கணவரும், சந்திரகுமாரி (கனடா), சந்திரசேகர் (கொழும்பு), சந்திரகாசன் (ஆசிரியர், இணுவில் மத்திய கல்லூரி), அரவிந்தன் (ஜேர்மனி), சந்திரபோஸ், சந்திரபவன் ஆகியோரின் அன்புத் தந்தையும், அன்னலிங்கம், காலஞ்சென்ற இராசா, செல்லமணி ஆகியோரின் சகோதரரும், யோகேந்திரனின் (கனடா) அன்பு மாமனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் கொழும்பில் நடைபெறும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
தி. சந்திரகாசன்
(மகன்)

மஞ்சத்தடி,
இணுவில்.

(8915)

## திருமதி விசாலாட்சி சரவணமுத்து

கைதடி வடக்கைச் சேர்ந்த திருமதி விசாலாட்சி சரவணமுத்து அவர்கள் 13-10-96இல் சிவபதமடைந்துள்ளார். அன்னார் காலஞ்சென்ற சரவணமுத்துவின் (மழவராயர்) துணைவியாரும், சிதம்பரப்பிள்ளை (மறவன்புலவு), நடராசா (கண்டி), றோகினியம்மா (மறவன்புலவு), இராசரத்தினம், காலஞ்சென்ற இராசேஸ்வரி, சங்கரப்பிள்ளை (ஜேர்மனி), யோகநாதன் (கனடா), கமலேஸ்வரி ஆகியோரின் அன்புத் தாயாரும், திருமதி சிதம்பரப்பிள்ளை இரத்தினேஸ்வரி, தியாகராசா (மறவன்புலவு), திருமதி இராசரத்தினம் இரத்தினேஸ்வரி, சிவசுப்பிரமணியம் (மட்டுவில்), திருமதி யோகநாதன் கிருஷ்ணவேணி, மகேந்திரன் (மிருக வைத்திய காரியாலயம், சாவகச்சேரி) ஆகியோரின் அன்பு மாமியாரும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் 14-10-96 அன்று கைதடி ஊத்தல் மயானத்தில் தகனம் செய்யப்பட்டது.

தகவல்!
ச. இராசரத்தினம்
(மகன்)

கைதடி வடக்கு,
கைதடி.

(43183)

## திருமதி சின்னையா மாணிக்கம்

சங்கிலியன் வீதி, நல்லூரைப் பிறப்பிடமாகக் கொண்ட திருமதி சின்னையா மாணிக்கம் 14-10-96 இல் காலமானார்.

இவர் காலஞ்சென்ற சின்னையாவின் அன்பு மனைவியும், பத்மநாதன், பத்மாதேவி (மட்டக்களப்பு), இராஜேஸ்வரி, புவனேஸ்வரி, சரோஜா (ஆசிரியை, மட்டக்களப்பு), சந்திரா (கனடா), யோகநாதன் (மட்டக்களப்பு), சவுந்தலா (நோர்வே), முருகநாதன் (ஜேர்மனி) ஆகியோரின் அன்புத் தாயாரும், பத்மநாதன், பஞ்சாட்சரம், பாலசுந்தரம், மகாதேவா, விஜயகுமார் (கனடா), யோகேஸ்வரி, இந்திரா ஆகியோரின் அன்பு மாமியாரும், சுப்பிரமணியம், இராமநாதன் ஆகியோரின் அன்புச் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று காலை 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக செம்பாடு இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவருக்கும் அறியத்தருகின்றோம்.

தகவல்:
சி. பத்மநாதன்
(மகன்)

இல 18, சங்கிலியன் வீதி,
நல்லூர் வடக்கு,
யாழ்ப்பாணம்.

(43192)

## 1-ம் ஆண்டு நினைவஞ்சலி

### ஆறுமுகம் இராசதுரை
(கொழும்பு பிரதம தபாற்கந்தோர் உத்தியோகத்தர்)

திதி: 15-10-1996

எங்கள் குடும்பத்தின் ஒளிவிளக்காய்த் திகழ்ந்து, எம்மை அன்போடும் பண்போடும் வழிநடத்திய எங்கள் அன்புத் தெய்வமே! ஆண்டுகள் பல சென்றாலும் உங்களை மறவோம் என்றும்.

ஆறுமுகம் கிருஸ்ணமூர்த்தி
நல்லூர் ப. நோ. கூ. சங்கம்

சுழிபுரம் மத்தி,
சுழிபுரம்.

(8916)

### அளவெட்டி - மல்லாகம்
## பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம் (வ-து)
### சங்க அங்கத்தவர்களுக்கான
# முக்கிய அறிவித்தல்

எமது சங்க கிளைக்குழு தேர்தலுக்காக 30-09-1996 இல் மூடப்பட்ட அங்கத்தவர் பெயர் விவரமடங்கிய வாக்காளர் பட்டியல்கள் 15-10-1996 தொடக்கம் பத்து நாள்களுக்கு பார்வைக்கு வைக்கப்பட்டுள்ளன. அவற்றை பின்வரும் எமது விற்பனை நிலையங்களிலும், தலைமைக் காரியாலயத்திலும் அலுவலக நேரங்களில் பார்வையிடலாம்.

| கிளை இலக்கம் | | காட்சிப்படுத்தும் விற்பனை நிலையங்கள் |
|---|---|---|
| 01 | — | இணுவில் பரராசசேகரப்பிள்ளையார் கோயிலடி. |
| 02 | — | யாழ். வீதி, மானிப்பாய். |
| 03 | — | அளவெட்டி தெற்கு, கிளை 07 கட்டடம். |
| 04 | — | கோண்டாவில் டிப்போ வீதி, |
| 05 | — | இணுவில் பரராசசேகரப்பிள்ளையார் கோயிலடி. |
| 06 | — | தலைமைக் காரியாலயம், கே. கே. எஸ். றோட், இணுவில். |
| 07 | — | அளவெட்டி தெற்கு, கிளை 07 கட்டடம். |
| 08 | — | மல்லாகம், கிளை 08 கட்டடம். |
| 09 | — | மல்லாகம், கிளை 08 கட்டடம். |
| 10 | — | மல்லாகம், கிளை 08 கட்டடம். |
| 11 | — | அளவெட்டி தெற்கு, கலைநகர் கிளை 11 கட்டடம். |
| 12 | — | மல்லாகம், கிளை 08 கட்டடம். |

ஆட்சேபனைகள் ஏதும் இருப்பின் 29-10-1996 இற்கு முன்னர் சங்கச் செயலாளருக்கு எழுத்து மூலம் விண்ணப்பிக்குமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

செயலாளர்

தலைவர்

14—10—1996

(சி/3388)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மழை காலத்தில் மருந்தில்லை; வன்னியில் பாரதூர விளைவுகள்

## தொண்டர் நிறுவனங்கள் எச்சரிக்கை

கொழும்பு, ஒக். 15

வடக்கில் இடம் பெயர்ந்த மக்கள் பெருமளவில் தங்கியிருக்கும் வன்னிப் பகுதியில், அத்தியாவசிய மருந்துப் பொருளுக்கு பெரும் தட்டுப்பாடு நிலவுகிறது.

வடக்கில் மழை காலம் ஆரம்பித்துள்ள நிலையில் மருந்துத் தட்டுப்பாட்டின் காரணமாக அகதிகள் பலர் சொல்லொணாக் கஷ்டங்களை எதிர்நோக்குவர் பாரதூரமான விளைவுகள் ஏற்படலாம் என்று வெளிநாட்டு அரச சார்பற்ற தொண்டர் நிறுவனங்கள் எச்சரித்துள்ளன.

தொண்டர் நிறுவனங்கள் வன்னிப் பகுதிக்கு மருந்துப் பொருள்களை சுதந்திரமாக எடுத்துச் செல்வதற்கு அரசாங்கம் இன்னும் அனுமதி வழங்கவில்லை.

வன்னிப்பகுதியில் மலேரியா நோயே மிகவும் வேகமாகப் பரவி வருகிறது.

மலேரியா தடுப்பு மருந்துகள் போதிய அளவு கிடைக்காவிட்டால் பாரதூரமான நிலைமை உருவாகலாம் என்றும் அரச சார்பற்ற நிறுவனங்கள் விசனம் தெரிவித்துள்ளன

## படையினர் வசமுள்ள விவசாய நிலங்கள்

### மீளக் கையளிக்க நடவடிக்கை

யாழ். மாவட்டத்தில் படையினரின் பாவனையில் உள்ள விவசாய நிலங்களை இயலுமான அளவுக்கு மீளக் கையளிப்பது என கொள்கை அளவில் இணக்கம் காணப் பட்டுள்ளது.

குடாநாட்டில் விவசாயம் செய்யும் பெரும்பாலான நிலங்கள் படையினரின் பாவனையில் உள்ளதால் விவசாயிகள் தமது விவசாயப் பணிகளை மேற்கொள்ள முடியாதிருப்பது பிரதிப் பாதுகாப்பு அமைச்சரின் கவனத்துக்கு கொண்டு வரப்பட்டது.

படையினரின் பாவனையில் உள்ள விவசாய நிலங்களை இயலுமானளவு மீளவும் விவசாயப் பணிக்கு ஒப்படைக்க கொள்கை அளவில் இணக்கம் காணப்பட்டதாக அரச அதிபர் செ. பத்மநாதன் தெரிவித்தார். (இ-3)

## காங்கேசன் துறைமுகத்தில் இறக்குமதி வேலை துரிதம்

கொழும்பு ஒக். 15

காங்கேசன்துறை துறைமுகத்தில் பொருள்களை இறக்கும் வேலையை துறைமுக அதிகார சபை பொறுப்பேற்ற பின்னர் அங்கு அதிக அளவில் சரக்குகள் இறக்கப்படுவதாக அறிவிக்கப்படுகிறது.

நாளாந்தம் சுமார் 500 மெற்றிக் தொன் பொருள்கள் இப்போது காங்கேசன் துறைமுகத்தில் இறக்கப்படுவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

பருத்தித்துறை துறைமுகத்திலும் இப்போது கூடிய அளவு பொருள்கள் இறக்கப்படுவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இரண்டு துறைமுகங்களிலும் மாதாந்தம் சுமார் 20,000 மெற்றிக் தொன் பொருள்கள் இறக்கப்படுவதாகக் கணக்கிடப்பட்டுள்ளது.

காங்கேசன்துறையில் உணவுப் பொருள்களும், அத்தியாவசியப் பொருள்களுமே இறக்கப்படுகின்றன.

பருத்தித்துறையில் தனியார் துறையினர் கொண்டு வரும் பொருள்கள் இறக்கப் படுவதுண்டு. தனியார் ஒப்பந்தகாரரே இந்த வரும் பொருள்களை இறக்கும் வேலைகளைப் பொறுப்பேற்றுச் செய்கின்றனர். (அ)

## மகப்பேற்று நிலையத்தை இயங்க வைக்குக

குருநகர் ஒக். 15

குருநகர் பொது வைத்திய சாலையிலுள்ள மகப் பேற்று நிலையத்தை இயங்க வைக்குமாறு கோரும் மகஜர்களை குருநகர் "முன்னேற்ற ஐக்கிய முன்னணி" அமைப்பு யாழ். சுகாதாரப் பணிப்பாளருக்கும், யாழ் அரச அதிபருக்கும் அனுப்பி வைத்துள்ளது.

(இ-51)

## ஓய்வூதியக் கிளை

யாழ். பிரதேச செயலர் பிரிவின் ஓய்வூதியக் கிளை யாழ். செயலகத்தில் கடந்த வாரத்திலிருந்து தனியாக இயங்கி வருகின்றது.

(இ-100)

## நூல் நிலையம்

இடம்பெயர்வின் போது உயிர்நீத்தவண பிதா ஜோண் லொறட் அடிகளாரின் நினைவாக புனித மரியாள் பேராலய இளைஞர் உருவாக்கல் இயக்கத்தினரால் நூல் நிலையம் ஒன்று திறந்து வைக்கப் பட்டுள்ளது. (இ)

## அச்சுவேலியில் அடையாள அட்டைப் படம்

அச்சுவேலிப்பகுதி பாடசாலை மாணவர்களுக்கான அடையாள அட்டைப் படங்களை பாடசாலையில் வைத்து பிடிப்பதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன

அச்சுவேலிப் பகுதி மாணவர்களின் வசதியைக் கருத்தில் கொண்டு, 29 ஆவது படைப் பிரிவின் பொறுப்பதிகாரி பாடசாலையில் வைத்து குறைந்த கட்டணத்தில் வர்ணப்படம் பிடிப்பதற்கான ஏற்பாடுகளைச் செய்திருந்தார். (இ-11)


# ஓவியம் படைத்திடுவீர்

## உலக உளநல நாள்

★ மேற்படி நாளையொட்டி ''சாந்திகம்'' உதயன் ஆதரவில் ஓவியப்படைப்புகளுக்கான களம் அமைக்கின்றது.

★ உங்களது ஓவியத்துவமான துலங்கல்களுக்கு பின்வரும் வாசகங்கள் தூண்டிகளாக அமையட்டும்.

★ மானசிகம் ★ மனத்தவம் ★ மனோதரிசனம்

★ மானச சஞ்சாரம் ★ மனவெளி

★ மேற்படி தூண்டிகளில் ஒன்றினை உங்களது படைப்பின் தொனிப்பொருளாகப் பொறிக்கவும்.

★ படைபபுகள் 25'' x 18'' அளவினதாக அமைய வேண்டும்.

★ ஆர்வமுள்ள அனைவரும் பங்கு கொள்ளலாம்.

★ ஓவிய வகைகளையும், ஓவிய சாதனங்களையும் விரும்பியபடி தெரிவு செய்யலாம்.

★ படைப்பினை உங்களது பெயர், முகவரியோடு 20-10-96க்கு முன்னதாக பின்வரும் இடங்களில் சேர்ப்பிக்கவும்.

உதயன் பணிமனை, 292/2, நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.

சாந்திகம், இல. 15, கச்சேரி நல்லூர் வீதி, சுண்டுக்குளி.

உளநல சிகிச்சை நிலையம், யாழ்.போதனா வைத்தியசாலை.

★ தெரிவு செய்யப்படும் கலைஞர்கள் கௌரவிக்கப்படுவர்.

★ முதலாவது தெரிவு — ரூ. 5,000/-

★ இரண்டாவது தெரிவு — ரூ. 3 000/-

★ மூன்றாவது தெரிவு — ரூ. 2,000/-

★ தெரிவுக் குழுவின் தீர்ப்பே இறுதியானது.

★ சாந்திகம், உதயன் நிறுவனங்களில் பணி[illegible] உறுப்பினர்களும் பங்குபற்ற முடியாது.

AHC


## தொழில் நுட்பக் கல்வி நிறுவக மாணவரின் பயணக் கஷ்டம்

யாழ்ப்பாணம் உயர் தொழில்நுட்பக் கல்வி நிறுவகம் கோப்பாய் ஆசிரியர் பயிற்சிக் கலாசாலையில் இம் மாதம் ஏழாம் திகதி வகுப்புக்களை ஆரம்பித்தது தெரிந்ததே.

நிறுவக மாணவர்களுக்குரிய அடையாள அட்டைகள் கொழும்பில் இருந்து வரவேண்டி இருப்பதால், பாதுகாப்பு அரணுக்கு வெளியே உள்ள மாணவருக்கு தற்காலிக அடையாள அட்டையை நிறுவகம் வழங்கியது. ஆனால் அந்த அடையாள அட்டையை பாதுகாப்பு படையினர் ஏற்க மறுக்கின்றனர்.

இதனால் அரணுக்கு வெளியே வதியும் மாணவர்கள் திங்கள் தவிர்ந்த ஏனைய நாள்களில் வகுப்புக்குச் செல்ல முடியவில்லை. ஆபத்தைக் கையில் வைத்துக் கொண்டு செல்வதாயின் கோண்டாவில் (அன்னங்கை) அல்லது தட்டாதெரு ஊடாகவே செல்ல வேண்டும். ஆனால் அப்பாதைகளின் ஊடாக பொதுமக்கள் செல்வதனால், மாணவர்கள் உரியநேரத்தில் வகுப்புக்குச் சமுகமளிக்க முடியாது. அத்துடன் தற்பொழுது இயங்கும் இடம் ஓர் ஒதுக்குப் புறமாக இருப்பதால் மாணவர்களின் பாதுகாப்புக்கு அச்சுறுத்தலாகவும் உள்ளது.

எனவே பழைய இடத்தில் தொழில் நுட்பக்கல்வி நிறுவகத்தை இயங்கச் செய்வதற்கும், அதுவரை மாணவர் புதிய இடமான கோப்பாய்க்குச் செல்வதற்கு திருநெல்வேலி (ஆடிய பாதம்) பாதையைப் பயன்படுத்தவும் ஒழுங்கு செய்து தரும்படி உரிய அதிகாரிகளை கேட்டுக் கொள்கிறோம். எமது ஒருங்கிணைப்பாளர் மாணவர் நலன் கருதி மேற்கொள்ளும் முயற்சிகளுக்கு ஒத்துழைப்பு நல்குமாறும் உரிய அதிகாரிகளை மிகவும் தயவுடன் கேட்டுக் கொள்கிறேன்.

சு. நக்கீரன்
(மாணவன்)

கற்பகப் பிள்ளையார் கோவிலடி,
இணுவில்.

## மீளாய்வு செய்வார்களா?

சென்ற வியாழக்கிழமை (10-10-96) நல்லூர்க் கோட்டத்தின் தமிழ் மொழித்திறன் போட்டி (பல பிரிவுகளுக்கு), யாழ். இந்து மகளிர் கல்லூரியில் ஒரு தொடர் கட்டடத்தில் நடைபெற்றது.

அதில் முதலாம் பிரிவு சிறுவர்களுக்கான பேச்சுப் போட்டியும் இடம்பெற்றது. அங்கு கடமையில் ஈடுபட்டிருந்த நடுவர்கள் அசமந்தப் போக்கையும், நாடியில் கைகொடுத்து நகைத்தவாறு இருந்ததையும் கண்கூடாகக் காணக் கூடியதாக இருந்தது. இந்த மொழித்திறன் போட்டியில் பேசிய சிறுவர், சிறுமியரின் நிலை, அவை - அஞ்சாமை, உச்சரிப்புத்தொனி, வெளிப்படுத்தும் செயற்திறன், மெய்ப்பாடு போன்றவற்றை நடுவர்கள் ஆழ்ந்து ஆராய்ந்து செயற்பட்டதாகத் தெரியவில்லை. இவர்களின் ஏனோதானோ போக்கு மிகவும் மனவருத்தத்தைத் தந்தது.

சிறிதளவேனும் விசய ஞானம் உள்ளவர்களை, தமிழின்பால் ஈடுபாடு உடையவர்களை, முன் அனுபவம் உள்ளவர்களை நடுவர்களாக நியமித்திருக்கலாம்.

### வாசகர் திருமுகம்

பார்வையாளர்களாலும், மற்றும் இங்கு பங்குபற்ற வந்த பாடசாலைகளின் ஆசிரியர்கள் பலராலும் ஏகோபித்து ஒருமுகமாகப் பாராட்டப்பட்ட சிறுமி ஒருத்திக்கு மூன்றாவது இடம்தானும் கிடைக்கவில்லை.

இப்படிப்பட்ட நடுவர்களின் அசமந்தப் போக்கினாலோ அன்றி அறியாமையினாலோ, அச்சிறுமி விரக்தியின் விளிம்பிற்கே தள்ளப்பட்டிருப்பார் என்று கருதலாம்

சுருக்கமாகச் சொன்னால் உலகமே கொண்டாடும் உளநல நன்னாளில் இவரின் உள்ளத்தின் முழுமையான நன்னிலை பாதிக்கப் பட்டுள்ளது இவரின் பேச்சுக்களை நெறிப்படுத்திய இவருடைய பாடசாலை ஆசிரியர்களும், அதிபரும் இது குறித்து அதிர்ச்சி அடைந்ததை அங்கு அவதானிக்கக் கூடியதாக இருந்தது.

எல்லோராலும் போற்றப்படும் கல்விச் செல்வத்தை அள்ளிக் கொடுக்கும் ஆசிரியர்கள் போட்டி பொறாமைகளுக்கு உட்படலாமா? இவர்களின் இப்போக்கினால் இச்சிறுமியின் திறமை குடத்திலிட்ட விளக்காக இருக்க வேண்டுமா?

இத் தமிழ் மொழித்திறன் போட்டியை ஒழுங்கு செய்து நடத்திய கல்வி அதிகாரிகள் இவற்றை மனிதநேயத்துடன் மனதில் நிறுத்தி இதன் மதிப்பீட்டை மீளாய்வு செய்வார்களா?

எஸ். தவராஜா.

பலாலி வீதி, கந்தர்மடம்.

## சாவகச்சேரி இந்துவின் இழப்பு

உதயன் 19-9-96 இதழில் சாவகச்சேரி இந்துக் கல்லூரிக்கு ஏற்பட்ட இழப்புக் குறித்து அடியேன் எழுதிய கருத்துக்களுக்கு, 27-9-96 உதயனில் பண்டத்தரிப்பைச் சேர்ந்த விஞ்ஞானப்பட்டதாரி ஆசிரியர் திரு அ. கந்தமனோகரன் தனது கருத்துக்களை எழுதியிருந்தார். இந்துவின் ஓய்வு பெற்ற ஆசிரியர் என்ற வகையிலும், பழைய மாணவன் என்ற வகையிலும் பதிலளிக்க வேண்டிய பொறுப்பு எனக்கு உண்டு.

நண்பர் கந்தமனோகரன் தான் ஒரு விஞ்ஞானப்பட்டதாரி என்பதை மறந்து பாவம் விளையாட்டு மைதானத்தில் கைவைத்துவிட்டார்.

அந்த அன்பர் தாங்கள் இரவோடிரவாக வந்த விதம் பற்றிக் கூறுகிறார் ஆனால் இடம் பெயர்ந்த மக்கள் தங்கள் சொந்த இடங்களுக்குத் திரும்பும் பொழுது விளைவித்த சேதங்களைப் பற்றியே நான் குறிப்பிட்டேன்.

பாடசாலையில் நடந்த சேதங்களை அவர் ஒப்புக் கொண்டது பற்றி மகிழ்ச்சி அடைகின்றேன். தென்மராட்சி, வடமராட்சியிலிருந்து வன்னிக்கு இடம்பெயரும் போது மக்கள் இவ்விதம் பல இலட்சம் ரூபா பெறுமதியான பொருள்களை அபகரித்துக் கொண்டு செல்லவில்லையே. அதே மாதிரித்தான் நாமும் செய்தோம். ஆனால் தென்மராட்சியிலிருந்து வீடு திரும்பும் போது ஒரு சிலர் தமக்குப் புகலிடம் அளித்த கல்லூரிக்கு இந்த அனர்த்தங்களைச் செய்தது உண்மை என்பதனை நான் மீண்டும் வலியுறுத்திக் கூறுகிறேன். அதனை அன்பர் கந்தமனோகரனும் ஒப்புக்கொண்டுள்ளார்.

எங்கள் கல்லூரியைப் பொறுத்தளவில் அதற்கு உண்டாகிய இழப்பு ஈடுசெய்யப்பட வேண்டும் என்பதே மிக முக்கியம். அது எப்போது நடக்கப் போகிறது?

அ. ஆறுமுகம் (ச. நீ)

தாமோதரம் வீதி, சாவகச்சேரி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குர்டிஷ் போட்டிக் குழுவிடம் சுலைமானியா வீழ்ச்சி

## தலையிட வேண்டாமென அமெ. எச்சரிக்கை

லண்டன் ஒக். 15

குர்டிஷ்தானில் உள்ள பிரதான நகரான சுலைமானியாவை ஈரானுக்கு ஆதரவாக பி. யூ. கே. என அழைக்கப்படும் ''குர்டிஷ் தேசபக்தர் யூனியன்'' மீண்டும் கைப்பற்றி உள்ளது.

ஐந்து வாரங்களுக்கு முன்னர் ஈராக் ஆதரவு கே. டி. பி. என அழைக்கப்படும் ''குர்டிஷ் ஜனநாயக் கட்சி'' சுலைமானியா நகரைக் கைப்பற்றியது தெரிந்ததே.

குர்டிஷ் ஜனநாயக் கட்சிக்கு ஆதரவாக வட ஈராக்கிற்கு அப்பொழுது ஈராக் படைகளை அனுப்பி இருந்தும் —

ஈராக் மீது அமெரிக்கா ஏவுகணைத்தாக்குதல் நடத்த இது காரணமாக அமைந்ததும் தெரிந்ததே.

தற்போதைய சண்டையில் தலையிட வேண்டாம் என்று ஈராக்கையும், ஈரானையும் அமெரிக்கா எச்சரித்துள்ளது. (இ)

புறூண்டியில்

## இனப்போருக்குமுடிவுகாண ஆபிரிக்க நாடுகள் அழைப்பு

புறூண்டியில் ஹூட்டு இன தீவிரவாதிகளுக்கும், ருட்சி இன இராணுவத்துக்கும் இடையில் மூண்டு வரும் போர் உடனடியாக நிறுத்தப்பட வேண்டும் என்று மத்திய ஆபிரிக்க நாடுகளின் தலைவர்கள் அழைப்பு விடுத்துள்ளனர்.

ஆபிரிக்காவின் சஹாராவை யொட்டியுள்ள ஏழு நாடுகளின் தலைவர்கள் தன்சானியாவில் கூடி புறூண்டியிலும், ருவாண்டாவிலும் இதுவரை 6 இலட்சத்து 50ஆயிரம் மக்களைக் கொன்றுள்ள இனப் போருக்கு முடிவு காணப்பட வேண்டும் என்றும் கோரி உள்ளனர். (இ-3)

## சுகவீனத்துடன் கழித்த 100 நாள்கள்

மொஸ்கோ ஒக். 15

யெல்ட்சின் ரஷ்ய அதிபராக இரண்டாம் முறையாகப் பதவி ஏற்று நேற்று முன் தினத்துடன் 100 நாள்கள் முடிவடைந்தன.

இந்த 100 நாள்களும் சுகவீனமுற்றும், மருத்துவ மனையிலும் அவர் இருந்தார் எனவும் —

இந்த 100 நாள்களிலும் செயலற்ற அதிபராகவே அவர் இருந்தார் எனவும் — தெரிவிக்கப்படுகிறது.

இந்த நிலை தொடருமானால் ரஷ்யாவில் அரசியல் குழப்பம் ஏற்படலாம் என அரசியல் ஆய்வாளர்கள் தெரிவிக்கிறார்கள். (இ-10)

## பலவந்தமாக உடன்கட்டை; எதிரிகள் விடுதலை!

ராஜஸ்தான், ஒக். 15

இறந்துபோன கணவனின் சிதையில் அவரின் மனைவியை பலவந்தமாகத் தூக்கிப் போட்டுக் கொலை செய்ததாக தாக்கல் செய்யப்பட்ட வழக்கில் ராஜஸ்தான் மாவட்ட நீதிமன்றம் எதிரிகளை கடந்த சனியன்று விடுதலை செய்தது. எதிரிகள் மீதான குற்றச்சாட்டுக்கள் சரிவர நிரூபிக்கப்படவில்லை என்று நீதிபதி தமது தீர்ப்பில் கூறினார்.

1987 ஆம் ஆண்டு இச்சம்பவம் இடம்பெற்றது. 18 வயதான ரூப்கன்வர் என்ற இளம் பெண்ணே கணவனின் சிதையில் உறவினர்களால் தூக்கிப் போடப்பட்டவர் ஆவார்.

எரியும் நெருப்பில் இருந்து வேதனையால் வெளியேற முயன்றபோது உறவினர்கள் இப்பெண்ணை மீண்டும் தூக்கி நெருப்பில் போட்டனர் என்று தெரிவிக்கப்பட்டது.

அப்போதைய பிரதமர் ராஜீவ்காந்தி, குற்றவாளிகளைக் கண்டு பிடிப்பதில் அப்பொழுது அதிக அக்கறை காட்டி வந்தார்.

ஆனால் நீண்டகால வழக்குக்குப் பின்னர் எதிரிகள் தற்போது விடுதலை செய்யப்பட்டுள்ளனர்.

நீதிமன்றத் தீர்ப்புக்கு இந்தியாவில் உள்ள பெண்கள் உரிமைகள் அமைப்புக்கள் கண்டனம் தெரிவித்துள்ளன. (இ-10)

## உலக அரங்கில்

### இஸ்ரேலிய பிரதமருக்கு ராணுவ அதிகாரிகள் கடிதம்

இஸ்ரேலியப் பிரதமர் பெஞ்சமின் நத்தனியாகோவுக்கு 33 உயர் இராணுவ அதிகாரிகள் மற்றும் வீரர்கள் இணைந்து எழுதியுள்ள கடிதத்தில் பலஸ்தீனர்களுடன் தேவையற்றதும் நியாயமற்றதுமான ஒரு யுத்தத்திற்கு தயவு செய்து எங்களைக் கொண்டு செல்லாதீர்கள் எனக் கேட்டுக் கொண்டுள்ளனர். (இ-10)

# இந்தியா செல்லும் ஈழ அகதிகளை தடுப்பது சர்வதேச ஒப்பந்தங்களை மீறும் செயல்

5 ஆயிரம் ஆண்டுகளுக்கு மேலான பழைமை கொண்ட மொழி படைத்து —

கடல் கடந்து மாபெரும் ரோமாபுரி பேரரசுடனும் கூட வாணிபம் நடத்தி —

தனக்கென தனித்துவம் மிகு பண்பாட்டு, கலை கலாசாரச் சிறப்புகளுடன் வாழ்ந்து வந்த தமிழன் இன்று சிங்கள இனவாதத்தின் கோரத் தாண்டவத்தால் உலக தேசமெங்கும் சிதறுண்டு போய் அகதி என்ற முத்திரையுடன் நிற்கிறான்.

அந்நிய மண்ணில் சில நாள்களாவது அனாதைகளாக நின்று அனுபவம் பெற்றவர்களால் மட்டும்தான் ஓர் அகதியின் உண்மையான உளைச்சலையும், மனக்குமுறல்களையும் உணர்ந்து கொள்ளவும், புரிந்து கொள்ளவும் இயலும்.

**கொலையிலும் பெரிய கொடுமை**

வாழையடி வாழையாக பிறந்து வளர்ந்த மண்ணை விட்டு, அதன் பாதைகள், மரங்கள், ஆறுகள், குளங்கள் கோவில்கள். தெய்வங்கள் எல்லாவற்றையும் விட்டு நினைவுகளைப் பெயர்த்தெடுப்பது என்பது கொலையிலும் பெரிய கொடுமை.

தமிழன் அப்படித்தான் பெயர்த்து எடுக்கப்பட்டு சர்வதேச நாடுகளிலும்நிற்கிறான்.

அகதிவாழ்வின் வேதனையை ஆண்டவனும் அறிந்திருந்தான்

அதனால் தான் பைபிளில் கூடச் சொல்லப்பட்டிருக்கிறது. ''உன் நாட்டிலோ, வீட்டிலோ அகதியாக வரும் அந்நியனுக்கு எப்போதும் முகம் கோணாது இருப்பாயாக. இஸ்ரவேலே உன் முதாதையர்கள் ஒரு காலத்தில் அகதிகளாக அலைந்தார்கள் என்பதை நினைவில் கொள்வாயாக'' என்று

கடவுளே, பார்த்து பைபிளில் இப்படிச் சொல்கிறார்.

அகதியான தமிழன் இப்படி சிதறுண்ட போதிலும் கூட ஒரு ஆறுதலான விடயம் என்ன வென்றால், தமிழனுக்கும், தமிழ்ப்பண்பாட்டுக்கும் எந்த சம்பந்தமோ, மரபு வழி உறவுத் தொடர்போ, நிற, மொழி, இன, வியாபாரத் தொடர்போ எதுவும் இல்

> ''ஈழத்தமிழர்களும் அகதி நிலையும்'' என்னும் தலைப்பில் வெரித்தாஸ் வானொலியில் ஒலிபரப்பான ''உண்மையின் எண்ணங்கள்'' விமர்சனத்தின் தொகுப்பு.

லாத மேற்குநாடுகள் குறிப்பாக கனடா, ஆஸ்திரேலியா, பிரான்ஸ், இங்கிலாந்து, நெதர்லாந்து, நோர்வே, ஜேர்மனி, சுவிட்சர்லாந்து, டென்மார்க் போன்ற நாடுகள் அநாதைகளாக வந்த தமிழனை அன்போடு தாயுள்ளம் கொண்டு வரவேற்று, அவன் சொந்த நாட்டை விட சுதந்திரமாய், மாண்போடு வாழ வழிசெய்து கொடுத்

## மத்திய அரசின் வரம்புமீறிய செயலுக்கு தமிழக அரசும் தாளம் போடுகிறது

திருக்கின்றன.

அப்படிப்பட்ட தமிழர்களில் ஒரு சிலர் செய்யும் குற்றங்களால் இப்போது தமிழனை வரவேற்க அந்த நாடுகள் தயங்குகின்றன என்பது இன்று எமக்கு வருத்தமான விடயம் தான்.

என்றாலும், இலட்சக் கணக்கான தமிழர்களை இந்த நாடுகள் ஏற்றுக் கொண்டன ஏற்றுக் கொண்டவர்களை மிகுந்த மாண்போடு நடத்தியது மட்டுமல்ல வளமாக வாழ வாய்ப்பும் செய்து கொடுத்தன.

**போராட்டத்தின் 2 ஆம் முதுகெலும்பு**

ஈழத் தமிழ்ப் போராட்டத்தின் இரண்டாவது முதுகெலும்பாக இன்று திகழ்வது இடம் பெயர்ந்து சென்ற இந்த அகதித் தமிழ்ச் சமுதாயம் தான் என்றால் அது மிகையாகாது.

இது இப்படியிருக்க —

சொந்தம், பந்தம் பாக்கியதை எல்லாம் கொண்ட எம் தாய்நாடு இந்தியா, அதுவும் நம் தமிழ்நாடு ஈழத்து மக்களை நடத்துகிற விதம் வேதனைக்குரியதாக இருக்கிறது.

ஜெயலலிதா ஆட்சிக்கும் பலின் முந்தைய ஆட்சியில் அகதிகளாக வந்த தமிழ் மக்கள் பட்ட அவஸ்தைகள் சொல்ல முடியாதவை.

ஈழத் தமிழ் அகதிகள் ஏதோ சாம்பல் பள்ளத்தாக்கு கொள்ளையர்களைப் போலச் சந்தேகிக்கப்பட்டார்கள்.

இப்போதைய தி. மு. க. ஆட்சியிலே இங்கு ஏற்கனவே இருந்து கொண்டிருக்கின்ற ஈழத்தமிழ் மக்கள் ஈரத்தோடும், இரக்கத்தோடும் நடத்தப்படுகிறார்கள் என்பது ஆறுதலான விடயம்.

என்றாலும், உள்ளம் குமுற வைக்கிற [illegible] இந்திய [illegible] அரசு இலங்கை அரசோடு சேர்ந்து மேற்கொண்டு வருகிறது.

பசியிலும், பட்டினியிலும் வாடி, துண்டாகி, துகளாகி பச்சை உறவுகளை பறிகொடுத்து இனிப் பொறுக்க முடியாது என அரச பயங்கரவாதத்துக்கு பயந்து தமிழகக்கரை நோக்கி அகதிகளாக வருகின்ற தமிழ் மக்களை நடுக்கடலிலே மிரட்டி விரட்டுவதும், கைது செய்வதும், சுமந்து வருகிற படகுகளை கைப்பற்றுவதுமான பலாத்காரத்தில் ஈடுபட்டுள்ளது இந்திய மத்திய அரசு.

இது அப்பட்டமான மனித உரிமை மீறல்.

யுத்த சூழலில் இருந்து அரசியல் அகதிகளாக வருவோரை ஏற்றுக் கொள்ள வேண்டும் என்பது ஐ. நா. சபையின் சர்வதேச ஒப்பந்த சட்டங்களில் ஒன்று.

இந்தியாவும் இந்த ஒப்பந்தத்தில் கையெழுத்திட்ட நாடுகளில் ஒன்று.

எனவே இந்தியா இத்தகைய ஒவ்வாத செயலில் ஈடுபடுவது சர்வதேச ஒப்பந்தங்களை மீறுகிற செயல்.

மத்திய அரசின் இந்த வரம்பு மீறிய தமிழர் விரோதச் செயலுக்கு தமிழக அரசும் தாளம் போடுவது என்பது வெட்கித் தலை குனிய வைக்கும் விடயம்.

ராஜீவ் காந்தியை கொன்றார்கள் என்ற சாக்குப் போக்கைச் சொல்லி ஒட்டு மொத்த ஈழத் தமிழ்ச் சமுதாயத்தையும் தண்டிப்பது என்பது முறையற்ற செயல்.

கொலை பாதகத்தை செய்த உண்மையான குற்றவாளிகளைக் கண்டு பிடித்து சட்டத்தின் முன் நிறுத்த வேண்டியது அரசின் நீதித் துறையின் கடமை.

அதை விடுத்து ஒரு சமுதாயமே அழிக்கப்படும் போது வாய் மூடி மெளனித்திருப்பதும், எதிராகச் செயல்படுவதும் அரசியல் சந்தர்ப்பவாதம் தவிர வேறு ஒன்றும் அல்ல

இந்திரா காந்தியை சுட்டுக் கொன்றது சீக்கியர் என்பதற்காக ஒட்டுமொத்த சீக்கிய சமூகத்தையும் இந்தியாவை விட்டு விரட்டி விட்டோமா?

மகாத்மா காந்தியை சுட்டுக் கொன்றது தீவிர இந்து மத பற்றுக் கொண்ட கோஷ்டி என்பதற்காக ஒட்டு மொத்த இந்து சமுதாயத்துக்கும் அந்தக் கொலைக்கும் பங்கு உண்டு என்று சொல்ல முடியுமா?

வங்காள தேசத்து மக்களை இலட்சக்கணக்கில் அகதிகளாக வரவேற்று ஆதரவும், புகலிடமும் அளித்த இந்தியாவுக்கு தமிழன் என்றால் மட்டும் ஏன் வாய் கசக்கிறது?

சம்பந்தமே இல்லாத திபேத்திய தலைவர் தலாய் லாமாவுக்கும், சகாக்களுக்கும் சீனாவின் கடும்பகையை சம்பாதித்துக் கொண்டும் சாம்ராஜ்ஜியமே அமைத்துக் கொடுத்து இருக்கிற இந்தியா ஏன் எமது தமிழ் மக்களை மட்டும் வெறுக்கிறது.

தமிழன் என்றால் எல்லோருக்கும் இளக்காரம், ஏனென்றால் இந்த இனம், தமிழ் இனம் இருக்கிறதே, தன்னையே காட்டிக்கொடுக்கிற இனம், தன்னையே விற்கிற இனம்.

தமிழினமே விழித்து எழுந்து கேள், மத்திய அரசிடம் பதில் பெறு. (இ-3)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சேதமடைந்த வீடுகளுக்கு நஷ்டஈடு வழங்க நடவடிக்கை எடுக்கப்படும்

## பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஒக் 15

யாழ் மாவட்டத்தில் சேதமடைந்த வீடுகளுக்கு நஷ்டஈடு வழங்க சம்பந்தப்பட்ட அமைச்சுடன் தொடர்பு கொண்டு நடவடிக்கை எடுக்கப்படும்.

அண்மையில் பலாலியில் நடந்த மாநாடு ஒன்றில் பிரதிப்பாதுகாப்பு அமைச்சர் அனுருத்த ரத்வத்தை இதனைத் தெரிவித்தார்.

இம்மாநாட்டில் கலந்து கொண்ட யாழ். இராணுவத் தளபதி, யாழ்ப்பாணத்தில் உடைந்த வீடுகளை மக்கள் திருத்த நஷ்டஈடு வழங்கப் படவில்லை என்றும் —

கட்டடப் பொருள்களுக்கு நிலவும் தட்டுப்பாட்டால் அவர்களால் வீடுகளைத் திருத்தமுடியவில்லை என்றும் — தெரிவித்தார்.

நஷ்டஈடு வழங்க சம்பந்தப்பட்ட அமைச்சுடன் தொடர்பு கொண்டு நடவடிக்கை எடுப்பதாகவும் —

கட்டடப்பொருள் கூட்டுத்தாபனம் மூலம் அவர்களுக்கு கட்டடப் பொருள்கள் கிடைக்க ஏற்பாடு செய்வதாகவும் — அமைச்சர் தெரிவித்தார். (இ-3)

## புங்குடுதீவில் தண்ணீர் தட்டுப்பாடு

வேலணை, ஒக். 15

புங்குடுதீவில் கடும் வரட்சி நிலவி வருவதினால் அங்கு குடிதண்ணீருக்கு பெரும் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. (இ-167)

## அச்சுவேலியில் விவசாயிகளுக்கு மண்எண்ணெய்

அச்சுவேலி, ஒக். 15

அச்சுவேலிப் பகுதி விவசாயிகளுக்கு மண்எண்ணெய் வழங்கப்படுகிறது.

பயிர்ச் செய்கை பரப்பளவுக்கு ஏற்ப 8 லீற்றர், 5 லீற்றர் வீதம் மண்எண்ணெய் வழங்கப்படுகிறது. (இ-11)

# மலையகத் தமிழர்களின் பாதுகாப்புக்கு உத்தரவாதம்

## இ. தொ. காவின் எம்.பி. கோரிக்கை

இலங்கை அரசியல் சாசனம் மீளமைக்கப்பட்டு, அதிகாரப்பரவலாக்கல் பற்றி பேசப்பட்டு வரும் இச்சந்தர்ப்பத்தில் மலையகத் தமிழ் மக்களின் பாதுகாப்பும், தனித்துவமும், பாரம்பரியங்களும் பேணப்படவேண்டும். இது பேணப்படாத பட்சத்தில் அதிகாரப் பரவலாக்கல் பெரும் பகற்கனவாகவே முடியும். மலையகத் தமிழ் மக்களின் தனித்துவம் பேணிப் பாதுகாக்கப்படும் என்ற உத்தரவாதம் வேண்டும்.

கொழும்பு மாவட்ட இ. தொ. கா. நாடாளுமன்ற உறுப்பினர் பி. பி. தேவராஜ் மேற்கண்டவாறு கூறினார்.

ஊவா மாகாண சாகித்திய விழாவில் கலந்து பேசுகையில் அவர் இப்படிக் கூறினார்.

மலையகத் தமிழ் மக்களின் பாரம்பரியம் தனித்துவமானது. தமிழகத்தின் வழித்தோன்றலின் அடிப்படையிலேயே அது அமைந்துள்ளது.

ஆனால் வடக்கு- கிழக்கு தமிழ் மக்கள் பூர்வீகமாக அப்பகுதியில் வாழ்ந்து சற்று வேறுபட்ட பாரம்பரியத்தைக் கொண்டிருக்கிறார்கள்.

மலையகத் தமிழ் பாரம்பரியத்துக்கும், வடக்கு - கிழக்கு பாரம்பரியத்துக்கும் வேறுபாடுகள் உள்ளன.

வடக்கு - கிழக்கு தமிழ் மக்கள் நீண்ட பாரம்பரியத்தைக் கொண்டவர்கள்; அவர்களுக்கு அதிகாரம் பரவலாக்கப்படும் போது மலையகத் தமிழ் மக்களின் பரம்பலுக்கும், தன்மைக்கும் ஏற்ப நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும். —

இப்படி அவர் மேலும் கூறினார். (இ-3)

# இன்று 'வெள்ளைப் பிரம்பு' தினம்

## விழிப்புலனற்றோரின் சேவைக்குத் தயாராகுக!

உலக மக்களின் கவனத்தை விழிப்புலன் இழந்தோர் பக்கம் ஈர்க்கு முகமாக வருடந்தோறும் ஒக்டோபர் மாதம் 15ஆம் திகதி ''வெள்ளைப் பிரம்பு தினம்'' ஆக கொண்டாடப்படுகின்றது.

1925 ஆம் ஆண்டு சர்வதேச லயன்ஸ் [மாநாட்டில்] பார்வையற்ற சீமாட்டி ஹெலன்கீலர் ''பார்வையிழந்தவர்களுக்கான சேவைக்கு தளபதியாக்குங்கள்!'' என்று லயன்ஸ் கழகங்களுக்கு ஓர் உருக்கமான வேண்டுகோளொன்றை விடுத்தார். அதனை ஏற்று கடந்த 70 ஆண்டு காலமாக கண் வங்கி, கண்விழிப்படல சத்திர சிகிச்சை, கண் பார்வை பரிசோதித்து இலவச மூக்குக் கண்ணாடி வழங்கல் போன்ற சேவைத் திட்டங்களை தங்கள் இயல்புக்கேற்ப சகல லயன்ஸ் கழகங்களும் ஆற்றி வந்தன. 1990ஆம் ஆண்டு தொடக்கம் இது ''கண்பார்வைக்கு முதலிடம்'' என்று பெயரிடப்பட்டு இச்செயல் திட்டங்கள் முன்னுரிமை பெற்று நடைமுறைப்படுத்தப்படுகின்றன.

இத்திட்டத்திற்கு உத்வேகம் கொடுக்கும் வகையில் சர்வதேச லயன்ஸ் கழக மாவட்டம் 306 பீ இலங்கையின் ஆளுநர் சித்திரலால் அமரதுங்க, முன்னைநாள் ஆளுநர் லுசியன் மெரீனகேயின் உதவியுடன் ஏழு பிராந்தியத் திட்ட தலைவர்களை நியமித்து இலவச கண்விழிப்படல சத்திர சிகிச்சை, பாடசாலை மாணவர்களின் பார்வையைப் பரிசோதித்து இலவச மூக்குக் கண்ணாடி வழங்கல், முதியோர் பார்வை பரிசோதித்து இலவச மூக்குக் கண்ணாடி வழங்கல், கண் பார்வை குறைவதற்கான காரணங்களை கட்டுப்படுத்த நடவடிக்கை எடுத்தல் ஆகிய திட்டங்களை சகல கழகங்களும் நடத்த வேண்டுமென்றும் அதற்கான உதவிகள் மாவட்டத்தில் பெற்றுக்கொள்ள முடியுமென்றும் அறிவுறுத்தினார். இதனால் யுத்தத்தினால் இடம்பெயர்ந்து மீளக் குடியேறி தம்மையே பார்க்க முடியாத நிலையிலும் யாழ். மாவட்ட அரிமாக்கழகங்கள் மக்கள் மத்தியிலும், அல்லல்களுக்கு மத்தியிலும் விழிப்புணர்வு ஏற்பட வேண்டுமென்பதற்காக வெள்ளைப் பிரம்புத் தினத்தை கழக மட்டத்திலும் விழிப்புணர்வு இயக்கத்தை வலய மட்டத்திலும், பிராந்திய மட்டத்திலும் கொண்டாடுகின்றன.

இக் கொண்டாட்டம் மூலம் நாம் மக்களைக் கேட்பது ''எவ்விடத்திலும் விழிப்புலன் இழந்தோர் வைத்திருக்கும் வெள்ளைப் பிரம்பை கௌரவியுங்கள்!'' — என்பதுதான்.

அவர்களை வித்தியாசமாக நடத்தாமல் அவர்களையும் சமுதாய அங்கத்தவர்களாக ஏற்றுக் கொண்டு, அவர்கள் சுயமாக வேலை செய்ய, இயங்க, படிக்க, சிந்திக்க, செயலாற்ற பழகுவதற்கு உதவ வேண்டும்; பச்சாதாபத்தைக் காட்டி தன்னம்பிக்கையற்றவர்களாக்கக் கூடாது. அவர்கள் சிறிதேனும் விழிப்புலனால் பார்க்க முடியுமானால் அதை அவர்கள் பிரயோகிக்க ஊக்குவிக்க வேண்டும்; மற்ற புலன்களால் பல்வேறு அனுபவங்களையும் பெற வழி காட்ட வேண்டும்.

விழிப்புலன் இழந்த குழந்தைகளின் பெற்றோர் வைத்தியர்களிடமும், விழிப்புலன் இழந்தோர் பாடசாலை ஆசிரியர்களிடமும் ஆலோசனை பெற்று அவற்றில் கவனமெடுத்து, பிள்ளையை வளர்க்க வேண்டும்; கல்வி புகட்ட வேண்டும். யாழ்ப்பாணத்தில் கைதடியில் இப்பாடசாலை இயங்குகின்றது. இங்கு முறைசார் கல்வி, கைத்தொழில், சங்கீதம், சங்கீத வாத்தியக்கலை, சிற்பக்கலை முதலியன கற்பிக்கின்றார்கள். பயிற்சியின் பின் அவர்கள் சுய தொழில் செய்து பிறர் உதவி எதிர்பாராது தாமே வாழ அங்கு பெறும் கல்வி உதவுகின்றது.

— லயன் டாக்டர் சு. சி. அருளானந்தம்
(வலயத் தலைவர், வலயம் II, பிராந்தியம் - 7, சர்வதேச அரிமா கழகம், மாவட்டம் 306 B, இலங்கை)

## சமூகக் கடமை இது!

''உறுப்பொத்தல் மக்கள் ஒப்பு அன்றால் வெறுத்தக்க
பண்பொத்தல் ஒப்பதாம் ஒப்பு''

''மனித இனத்தவர் உடல் அவயவங்களால் ஒருவருக்கொருவர் ஒத்திருப்பதால் எல்லோரும் மக்கள் என்பது தவறு. அன்பினாலும் ஒருவருக்கொருவர் மனம் ஒத்து ஒன்றுபட்டுப் பழகுவதாலும், அதனால் விளையும் பண்புடமையாலும் இணைந்து வாழ்பவரே ஒத்த மக்கள்'' — என்றார் திருவள்ளுவர்.

திருவள்ளுவரின் இப்பெரும் கருத்தை — மக்களின் ஒன்றுபட்ட தன்மையையும், கருணையையும் எடுத்துக்காட்டி சேவை மனப்பான்மையை ஊக்குவித்து வளர்க்கும் நோக்குடன் சர்வதேச ரீதியில் ஒக்ரோபர் 15 ஆம் திகதி வெள்ளைப் பிரம்பு தினமாகக் கொண்டாடப்படுகின்றது.

வெள்ளைப் பிரம்பு தினம் விழிப்புலனற்றோர் தினமாக அனுஷ்டிக்கப்படுவதற்கு ஆரம்ப கர்த்தாவாக இருந்தவர் லயன் ஜோர்ஜ் பென்ஹாம் ஆவார் இவர் 1930 இல் தனது பகுதியின் அரிமா கழகத்தின் தலைவராக இருந்த சமயம் ஒருநாள் பிரதான வீதி ஒன்றை விழிப்புலன் அற்ற ஒருவர் சாதாரண தடி கொண்டு கடப்பதற்கு கஷ்டப்பட்டுக்கொண்டிருந்ததைக் கண்டார்.

தடியை ஊன்றி நடக்கும் வேறு சாதாரண நபர்களிலிருந்து விழிப்புலனற்றோரை வேறுபடுத்த முடியாது இருந்ததைக் கண்ட அவர், விழிப்புலனற்றோரின் தனித் தன்மையை ஏனையோருக்கு உணர்த்தும் வகையில் அவர்களுக்கு விசேட ஊன்று தடி ஒன்றை வழங்குவது சிறந்தது என நினைத்தார். அதன் பயனாகவே வெள்ளைப் பிரம்பில் சிவப்புக் கோடு அமைந்த தடி அறிமுகப்படுத்தப்பட்டது.

விழிப்புலனற்றோருக்கு வெள்ளைப் பிரம்பை வழங்கி பின்வரும் விடயங்களை நாம் கைக்கொள்வதன் மூலம் அவர்களின் நல்வாழ்வுக்கு நாம் உதவமுடியும்.

★ அவர்கள் தெருக்களை கடக்க முயலும்போது மக்கள் தாமாகவே முன்வந்து உதவி செய்தல் வேண்டும்.

★ ஓர் ஆபத்தான பகுதிக்கு பார்வை அற்றவர்கள் நெருங்கிச் சென்றால் உடனே அதனை அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருதல்.

★ அவர்கள் நடந்து கொண்டிருக்கும்போது பாதையை தடை செய்வதைத் தவிர்த்தல்.

★ அவர்கள் தெருவினைக் கடக்கும் வரை வாகனங்களில் செல்வோர் வாகனங்களை நிறுத்தி வைத்தல்.

★ வாகனங்களின் ''ஹோர்ன்'' சத்தங்களையும், சைக்கிள்களின் மணிச்சத்தங்களையும் கண்டபடி அடித்து அவர்களை பீதி அடைய வைப்பதை இயன்றவரை தவிர்த்தல்.

★ வாகனங்கள் நிற்பாட்டும் இடங்களில் மட்டுமல்லாது ஏனைய இடங்களிலும் இவர்கள் தெருக்களைக் கடக்க முயலும்போது வாகனத்தில் செல்வோர் அவர்களுக்கு உதவி செய்தல்.

★ பார்வை அற்றவர்கள் பஸ்கள், ரயில்கள் போன்றவற்றில் ஏறும் போது அவர்கள் தாங்கள் போக விரும்பும் இடங்களுக்கான சரியான பஸ்களில் அல்லது ரயில்களில் ஏறுகின்றார்களா என்பதை உறுதிப்படுத்த உதவுதல்.

★ அவர்கள் இறங்கிச் செல்லவேண்டிய இடங்களை அறிந்து அந்த இடங்கள் வந்ததும் அவர்கள் இறங்குவதற்கு உதவுதல்.

★ பாடசாலைச் சிறுவர்களுக்கு இவர்களுக்கு உதவி செய்யும் பண்பினை சிறுவயதிலேயே பழக்குதல்.

★ வெள்ளைப் பிரம்பின் முக்கியத்துவத்தை அது தொடர்பான சமூகக் கடப்பாட்டை கற்றோர்கள் ஏனையவர்களுக்கும் உணர்த்துதல்.

இவை மட்டுமல்லாது பொருளியல் ரீதியில் அவர்கள் நல்ல வாழ்வினைப் பெறுவதற்கு உதவி செய்து கொடுத்தலும் இத்தினத்தின் நோக்கமாகும்.

லயன் க. ஜெயரத்தினம்
(செயலாளர், நல்லூர் லயன்ஸ் கழகம்)
(அதிபர், யாழ். தொழில்நுட்பக் கல்லூரி)

வெள்ளைப் பிரம்பை கௌரவியுங்கள்!
அரிமா கழகம்
வவுனியா, சாவகச்சேரி, நல்லூர், கோப்பாய், மானிப்பாய் பரிஷ்
சர்வதேச அரிமா கழகம் — மாவட்டம் 306B, பிராந்தியம் 7, வலயம் 2

விழிப்புலனற்றோர் நல்வாழ்வு பெற வெள்ளைப் பிரம்பு தினத்தில் சங்கற்பம் செய்வோம்!
நல்லூர் லயன்ஸ் கழகம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரம்

## விற்பனைக்கு

யாழ்ப்பாணம் பிரதான வீதியில கடைகள், வீடு கட்டக்கூடிய காணியும், கன்னாதிட்டி வீதியில் கடையொன்றும், கொட்டடி ஆஸ்பத்திரி வீதியில் வீடொன்றும் விற்பனைக்குண்டு தொடர்பு: பொ. ஸ்ரீபத்மநாதன், 5 முஸ்லிம் கல்லூரி வீதி (லைடன் சந்தி), கொட்டடி, யாழ்ப்பாணம். (43186)

8 ஸ்ரீ 1135 மொறிஸ் ஒக்ஸ்போட் நீல நிறக் கார், மற்றும் 3600 W றொபின் டைனமோ, 14 இஞ்சி சொனி கலர் T.V, 5 அடித் திரையும் அதற்குரிய லென்ஸ் மற்றும் எலக்ரோனிக் பொருள்களும் விற்பனைக்குண்டு. தொடர்பு கொள்ள வேண்டிய மூகவரி: முல்லை வீடியோ விஷன், கொடிகாமம் வீதி, கரவெட்டி. (43187)

## மணமகன் தேவை

இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த படித்த அழகிய 32 வயதுடைய பெண் ஆசிரியைக்கு பெற்றோர் மணமகனைத் தேடுகின்றார்கள் : நட்சத்திரம் அச்சுவினி. தொடர்பு:மே/பா இல:545, உதயன் பணிமனை, யாழ்ப்பாணம். (43184)

## மணமகள் தேவை

இங்கிலாந்தில் தொழில் புரியும் யாழ். இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த 31 வயதுடையவரும், நட்சத்திரம் உத்தரட்டாதி இரண்டாம் பாதமும் 7 ஆம் இடம் செவ்வாய் குறைவான பாவக்கிரகம் உள்ள மணமகனுக்கு படித்த அழகுள்ள மணமகளை பெற்றோர் விரும்புகின்றனர். தொடர்பு; கந்தையா சுப்பிரமணியம் (ஆசிரியர்), கேணியடி வீதி' மீசாலை மேற்கு (சி-3286)

வங்கியில் கடமையாற்றும் 35 வயதுடைய இந்து கௌரவ குடும்ப மணமகனுக்கு படித்த அழகுள்ள மணமகளை பெற்றோர் விரும்புகின்றார்கள். தொடர்பு: மே/பா இல:546, உதயன் பணிமனை, யாழ்ப்பாணம். (43185)

கனடாவில் தொழில் புரியும் நட்சத்திரம் திருவோணம் 3 ஆம் கால், 39 வயதுடைய யாழ். இந்து கௌரவ குடும்ப மணமகனுக்கு படித்த அழகுள்ள மணமகளை பெற்றோர் விரும்புகின்றனர். தொடர்பு: R. செல்வநாயகம், சந்தை கிழக்கு ஒழுங்கை, மானிப்பாய். (8912)

## புத்தகப்பிரியர்களே

தென்மராட்சியில் பல அரிய நூல்களை இரவல் பெற்று வாசிக்க நாடுங்கள்: லிங் லெண்டிங் லைப்ரரி (Ling Lending Library), இல: 41, தபாலக வீதி, சாவகச்சேரி. (43084)

## திருமண சேவை

துர்க்கா திருமண சேவை – மாயக்கப்பிள்ளையார் கோவிலடி, தம்பசிட்டியிலும், யாழ்ப்பாணம், நாவலர் வீதி–பிறவுண் றோட் சந்தியிலும் இயங்குகின்றது திங்கள் சந்திக்கலாம் படத்துடனும், குறிப்புடனும் வரவும். (43110)

## 3 ஆம் மாத நினைவஞ்சலி

### சிதம்பரப்பிள்ளை முருகேசு

எங்கள் பாசமுள்ள அப்பாவே!
உங்கள் ஆத்மா சாந்தியடைய
ஐங்கரனை வேண்டுகின்றோம்.

வசந்தா.

''கவிஞன் இல்லம்''
சண்டில்,
கரவெட்டி. (சி-3279)

## 4-ம் ஆண்டு நினைவஞ்சலி

பிறப்பு: 05 – 01 – 1917

இறப்பு: 15 – 10 – 1992

அமரர்

### பொன்னுத்துரை செல்வரத்தினம்

( இளைப்பாறிய கூட்டுறவு பரிசோதகர் )

குடும்ப ஒளி விளக்கே! தூண்டாத் திருவிளக்கே!
மாண்டீர்கள் என்பதை நம்ப மனம் மறுக்கிறதே!
உங்கள் ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திக்கும்:

— மனைவி

''மன்றம்''
லோட்டஸ் வீதி,
மானிப்பாய். (43182)

## நவாலி அ. தே. வ. ச அறிவிப்பு

நவாலி அட்டகிரி முருகன் தேவஸ்தான வழிபடுவோர் சங்க பழைய அங்கத்தவர்கள் சந்தாப் பணத்தினை செலுத்தி அங்கத்தவர் உரிமையைப் புதுப்பிக்கவும்.

மேலும் புதிதாகச் சேர விரும்பும் அங்கத்தவர்கள் நடப்பு ஆண்டு பொருளாளர் திரு சி. சிவலிங்கத்துடன் 18 ஆம் திகதிக்கு முன்னர் தொடர்பு கொண்டு செலுத்துமாறு கேட்கப்பட்டுள்ளனர்.

எஸ். ரமேஷ்,
செயலாளர்

(43188)

## 7 ஆம் ஆண்டு நினைவுகள்



அமரர்

### செல்லையா அரியரத்தினம்

(முன்னாள் இலங்கை வங்கி உத்தியோகத்தர்)

பிறப்பு: 20 – 11 – 1926

இறப்பு: 2 – 10 – 1989

என்றும் நீங்காத நினைவுகளுடன்
மனத்தகத்தே அஞ்சலி செலுத்துகின்றோம்.

- குடும்பத்தினர்.

கோவில் வாசல்,
இணுவில். (43139)

# டெங்குக் காய்ச்சலால் இலங்கையில் 38 பேர் பலி

கொழும்பு, ஒக். 15

இந்த வருடம் செப்ரெம்பர் மாதம் வரை இலங்கையில் 38 பேர் டெங்குக் காய்ச்சலினால் உயிரிழந்துள்ளனர். இவர்களில் அநேகமானவர்கள் சிறுவர்களாவர்.

இப்படி மேல் மாகாண சுகாதாரத் திணைக்களத்தைச் சேர்ந்த டாக்டர் லக்ஷ்மி டி. சில்வா தெரிவித்தார்.

டெங்கு வைரஸ் கிருமியைக் கட்டுப்படுத்த முன்வரா விட்டால் அந்நோய் கூடுதல் அபாயத்தை ஏற்படுத்துமென்றும் அவர் தெரிவித்தார்.

இந்த ஆண்டில் கடந்த செப்ரெம்பர் மாதம் வரை 599 பேர் டெங்குக் காய்ச்சலினால் பீடிக்கப்பட்டனர் எனவும் தெரிவிக்கப்பட்டது

வீடு, வாசல்களைச் சூழவுள்ள நீர்த்தேக்கங்களிலேயே டெங்குக் காய்ச்சலைக் கொண்டுவரும் நுளம்பு உற்பத்தியாகின்றதெனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-3)

# தொலைக்கல்வி பயிற்சி ஆசிரியர் பரீட்சை முடிவு தெரியாது மீண்டும் தோற்றும் நிலை

கடந்த வருடம் நடைபெற்ற தொலைக்கல்வி ஆசிரியர் பயிற்சி நெறி இறுதிப் பரீட்சைக்குத் தோற்றி பரீட்சை முடிவுகள் கிடைக்காத பயிற்சி ஆசிரியர்கள், பரீட்சைக் கட்டணம் செலுத்தி மீண்டும் பரீட்சைக்கு விண்ணப்பித்துள்ளனர்.

தொலைக் கல்வி ஆசிரியர் பயிற்சி இறுதிப் பரீட்சை முடிவுகள் கடந்த மாதம் வெளியாகி இருந்தன.

எனினும் யாழ். மாவட்டத்தில் இருந்து பரீட்சைக்குத் தோற்றிய பயிற்சி ஆசிரியர்களில் சில பாடத்துறையினரின் பரீட்சை முடிவுகள் (நடனம், சித்திரம், உடற்கல்வி) யாழ்ப்பாணத்துக்கு வந்து சேரவில்லை.

பரீட்சை முடிவு என்ன என்பதை அறிவதற்கு சம்பந்தப்பட்ட ஆசிரியர்கள் எடுத்த நடவடிக்கைகள் பலன் தராத நிலையில், இந்த வருடம் நடைபெறவுள்ள பரீட்சைக்கு பரீட்சைக் கட்டணம் செலுத்தி விண்ணப்பித்துள்ளனர். (இ-11)

# படையினர், அதிகாரிகள் மீது 3 ஆயிரம் லஞ்ச முறைப்பாடு

இராணுவம், பொலீஸில் இருப்போர் உட்பட திணைக்களத் தலைவர்கள் பலரும் லஞ்சம், ஊழல் தொடர்பான விசாரணைகளுக்கு உட்படுத்தப்படவுள்ளனர்.

சுமார் 3 ஆயிரத்து 98 முறைப்பாடுகள் லஞ்ச ஆணையாளர் திணைக்களத்துக்கு கிடைத்துள்ளன என்று தெரிவிக்கப்படுகிறது.

கடந்த ஆண்டு ஜனவரி மாதம் முதல் இந்த ஆண்டு நடுப்பகுதி வரையிலான காலப் பகுதியில் இம்முறைப்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

சுமார் 200 பேர் மீது லஞ்சம், ஊழல் தொடர்பாக ஏற்கனவே வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றும், ஏனையோர் மீது விசாரணை தொடர்ந்து நடைபெறுகிறது என்றும் தெரிவிக்கப்பட்டது. (இ-3)

ஓம்

விராட் விஸ்வப் பிரமனே நம

## நன்றி நவிலலும் சபிண்டீகரண அழைப்பும்

உதிப்பு: 16 — 07 — 1924



உதிர்வு: 07 — 09 — 1996

### அமரர் செல்லையா சபாரத்தினம்

கடந்த 16 - 09 - 96 இல் காலமான எமது அன்புத் தெய்வத்தின் மறைவைக் கேட்டு எமக்குப் பல்வேறு வழிகளிலும் உதவிகள் புரிந்த அனைவருக்கும் சங்கத்தானை இத்தியடிப் பிள்ளையார் தேவஸ்தான பரிபாலன சபையினர், சங்கத்தானை மீனாட்சி அம்மன் தேவஸ்தான பரிபாலன சபையினர், சாவகச்சேரி கைத்தொழில் வணிகர் மன்றத்தினர், உற்றார், உறவினர், நண்பர்களுக்கும் எமது மனமார்ந்த நன்றியறிதலைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

நாளை (16 - 10 - 96) புதன்கிழமை எமது இல்லத்தில் நடைபெறவுள்ள ஆத்மசாந்திப் பிரார்த்தனைகளிலும், மதியபோசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

பொற்தொழிலாளர் வீதி,
சங்கத்தானை,
சாவகச்சேரி. (C/3282)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்

## எது சரியானது?

அரசாங்கத்தின் பாதுகாப்புச் செலவு இவ்வருடத்தில் 5,000 கோடி ரூபாவையும் தாண்டிவிட்டதாகச் சுட்டிக் காட்டப்பட்டிருக்கிறது.

பொதுமக்கள் ஐக்கிய முன்னணி அரசு பதவிக்கு வந்த புதிதில் — 1994 ஆம் ஆண்டு பிற்பகுதியில் — இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வு கண்டு, போருக்குச் செலவிடப்படும் பணத்தைக் குறைத்து, மிச்சமாகும் பணத்தை அபிவிருத்தி வேலைகளுக்குப் பயன்படுத்தி, பலருக்கு வேலைவாய்ப்பு அளிக்கப்படும் எனத் தெரிவிக்கப்பட்டது. ஐக்கிய தேசியக் கட்சி அர்த்தமற்ற போருக்கு பெரும் பணத்தைச் செலவிட்டதாகவும் அப்போது கண்டனம் தெரிவிக்கப்பட்டது,

ஆனால் ஐக்கிய தேசியக் கட்சி போரின் பொருட்டு, பாதுகாப்புச் செலவாக ஆகக் கூடியது 2,500 கோடி ரூபாவையே செலவிட்டது ஆனால் இந்த வருடத்தில், பொ. ம. ஐ. மு. அரசு 5,000 கோடி ரூபாவை — முந்தியதைவிட இரண்டு மடங்கு பணத்தை — செலவிடுகிறது.

இரண்டு வருடங்களில் போர்ச் செலவு இரண்டு மடங்காகியிருக்கிறது! வல்லரசு ஒன்றின் பாதுகாப்புச் செலவே இவ்வாறு இரண்டு வருடங்களில் இரண்டு மடங்காக உயர்ந்திருக்குமா என்பது சந்தேகம்.

அரசியல் தீர்வு ஒன்றுக்கு அரசு ஆரம்ப முயற்சி செய்தது. அது ஒப்பேறவில்லை. அதனால் போரைத் தீவிரப்படுத்த வேண்டியதாயிற்று என்று அரச தரப்பில் காரணம் கூறப்படுகிறது.

காரணம் எதுவாக இருந்தாலும், ஓர் உள்நாட்டுப் போருக்காக இந்தளவு பெருந்தொகைப் பணத்தைச் செலவிட்டால் நாடு எவ்வாறு அபிவிருத்தி காண்பது, மக்களின் வாழ்க்கை நிலை எப்போது முன்னேறுவது என்பதே கேள்விக்குரியன.

போரை முடிவுக்குக்கொண்டு வந்த பின்னர் தான் — விடுதலைப் புலிகளை அழித்த பின்னர் அல்லது இராணுவ ரீதியாகப் பலவீனப்படுத்திய பின்னர் தான் — அரசியல் தீர்வுக்கான முயற்சி என்ற தனது நிலையை அரசு அழுங்குப்பிடியாகக் கவ்விக் கொண்டிருக்கிறது. சரி, அத்தகைய ஒரு நிலையில் இருந்து நோக்கினாலும், போர்ச் செலவு மேன்மேலும் உயருமா அல்லது குறையுமா?

பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் அனுருத்த ரத்வத்தை சில நாள்களுக்கு முன்னர் கொழும்பு ஆங்கில வார இதழ் ஒன்றுக்கு அளித்த செவ்வியில் —

கடந்த இரண்டு வருடங்களிலும் இராணுவ வெற்றிகள் கணிசமாகக் கிடைத்திருப்பதால் அடுத்த வருடத்தில் (1997 இல்) பாதுகாப்புச் செலவினம் குறையும் — என்று தெரிவித்திருந்தார்.

ஆனால் 1997 ஆம் ஆண்டுக்கான பாதுகாப்புச் செலவினம்6,000 கோடியாகஇருக்கும் என்று உத்தேச நிதிமதிப்பீடுகள் வெளியாகி உள்ளன.

உத்தேச மதிப்பீடு சரியானதாக இருப்பின் போர் மேலும் தீவிரப்படுத்தப்படும் என்பது அர்த்தம்.

பாதுகாப்புப் பிரதி அமைச்சர் சொல்வது சரியா, உத்தேச நிதி மதிப்பீடு சரியா என்பதனை அமைச்சர் பீரிஸ் அடுத்த மாதம் ஆறாம் திகதி தமது வரவு — செலவுத் திட்டத்தைச் சமர்ப்பித்த பின்னரே அறிந்து கொள்ளலாம்.

போரைத் தீவிரப்படுத்த மேன்மேலும் அதிக பணம் ஒதுக்கப்படுமானால், அரசியல் தீர்வில் அரசுக்கு நம்பிக்கையில்லை என்[illegible] கொள்ள வேண்டும்.

# இவ் வருடமும் பொது மக்கள் மீது பொருளாதாரச் சுமை இருக்காது

## பட்ஜட் குறித்து ஜனாதிபதி

கொழும்பு, ஒக். 15

கடந்த இரு வருடங்களைப் போலவே இந்த வருடமும் வரவு — செலவுத் திட்டம் மூலம் மக்கள் மீது பொருளாதாரச் சுமைகள் ஏற்படமாட்டா.

ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்துக்கு அலரி மாளிகையில் வைத்து அளித்த பேட்டியில் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் கூறியதாவது:-

தற்போதைய அரசாங்கம் பதவியேற்றதும் தேவையற்ற கொண்டாட்டங்களுக்கு முற்றுப்புள்ளி வைத்தது.

வாகனங்களின் இறக்குமதி மட்டுப்படுத்தப்பட்டது.

பாதுகாப்புச் செலவினங்கள் அதிகமாக இருந்த போதிலும் பணவீக்கத்தைக் குறைத்தது ஒரு சாதனையாகும்.

வரட்சியின் காரணமாக உற்பத்தித் துறையும் பாதிக்கப்பட்டது.

அரசாங்கத்தின் திட்டங்களினால் பூரண பயனைப் பெற்றுக் கொள்வதில் தாமதம் உண்டானதற்கு இதுவே காரணமாகும்.

போரின் காரணமாக இந்தத்தாமதம் சற்று அதிகமாகக் கூட இருக்கலாம்.

### மானியம்

அரசாங்கம் அபிவிருத்தித் திட்டங்களை அமுல் செய்யும் அதே வேளையில், பல்வேறு வழிகளில் மக்களுக்கு மானியமும், நிவாரணமும் வழங்குவதற்காக 2 ஆயிரத்து 300 கோடியைச் செலவிடுகிறது.

மானியங்களை வழங்கிக் கொண்டிருந்தால் பொருளாதார அபிவிருத்தியை முன்னேற்ற முடியாது.

பொருளாதார அபிவிருத்திக்கு ஏற்ப மானியங்களைக் குறைப்பது தவிர்க்க முடியாதது. மா, பாண் ஆகியவற்றுக்கான மானியம் வழங்கப்படுவதால் ஏற்படும் இழப்புக்களை ஆரம்பத்தில் அரசாங்கம் சமாளித்தது.

எனினும் உலகச் சந்தையில் ஏற்பட்ட விலையேற்றத்தால் தொடர்ந்தும் அப்படிச் செய்ய முடியவில்லை.

மானியக்குறைப்பால் பெறப்பட்ட பணம் நாடுகாக்கும் பணியில் ஈடுபட்டுள்ள படையினரின் சேமநலனுக்கு செலவிடப்படுகின்றது.

### இனப்பிரச்சினை

இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண அரசாங்கம் மேற்கொள்ளும் மனப்பூர்வமான முயற்சிகளை பிற நாடுகள் ஆதரிக்கின்றன.

இதன் காரணமாகவே போரின் மத்தியிலும் வெளிநாட்டு உதவிகள் குறைவின்றிக் கிடைக்கின்றன.

இருந்த போதிலும், எந்நாளும் பிறநாடுகளில் கையேந்திக் கொண்டிருப்பது அரசாங்கத்தின் நோக்கம் அல்ல.

முன்னைய காலங்களைப் போலன்றி வெளிநாட்டு உதவிகள் அபிவிருத்தி நடவடிக்கைகளுக்கு மட்டுமே பயன்படுத்தப்படும்.

இப்படி ஜனாதிபதி கூறினார். (இ-3)

## முத்திரைக்குத் தட்டுப்பாடு

யாழ். பிரதம தபாலகம் உட்பட குடாநாட்டிலுள்ள பெரும்பாலான தபாலகங்களில் இரண்டு ரூபா முத்திரைக்குத் தற்போது தட்டுப்பாடு நிலவுவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

வெளிக் கடைகளில் 2 ரூபா 50 சதத்துக்கு இது விற்கப்படுகிறது (இ-4)

## மின் இணைப்பு வேலைகள்

நெல்லியடியிலும் அதனைச் சுற்றியுள்ள பகுதிகளிலும் உள்ள மின் இணைப்புகள் யாவும் திருத்தி அமைக்கப்பட்டு வருகின்றன.

இப் பகுதிக்கு மின்சாரம் வழங்கும் பொருட்டு இலங்கை மின்சார சபையினரால் இவை திருத்தம் செய்யப்பட்டு வருகின்றன. (இ-173)

# ஈழ அகதிகளைத் திருப்பி அனுப்பும் திட்டத்தை மறுபரிசீலனை செய்க

## டென்மார்க் தூதருக்கு ஈ. பி. டி. பி. கடிதம்

மட்டக்களப்பு, ஒக். 15

இலங்கை அகதிகளைத் திருப்பியனுப்ப மேற்கொள்ளப்படும் நடவடிக்கையை மறுபரிசீலனை செய்யுமாறு மட்டக்களப்பு மாவட்ட ஈ. பி. டி. பி அமைப்பாளரும், யாழ். மாவட்ட எம். பீயுமான அ. இராசமாணிக்கம் டில்லியில் உள்ள டென்மார்க் தூதரகத்துக்கு அனுப்பியுள்ள கடிதத்தில் கேட்டுள்ளார்.

அண்மையில் 5 தமிழ் அகதிகள் வற்புறுத்தலின் பேரில் நாடு கடத்தப்பட்டுள்ளனர் எனவும் —

இலங்கையில் யுத்த சூழ் நிலை முற்றிலும் மாறாத நிலையில் — சமாதானம் நிலை நாட்டப்படாத வேளையில் — சுய விருப்பு இன்றி இலங்கை அகதிகளைத் திருப்பி அனுப்புவது மனிதாபிமான நடவடிக்கை இல்லை என்றும் —

இலங்கை அகதிகளின் நிலைமையை மனிதாபிமான ரீதியில் அணுகி இனப் பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வு காணப்படும் வரை அகதிகளைத் திருப்பி அனுப்புவதை நிறுத்தி வைக்குமாறும் — அக்கடிதத்தில் அவர் கேட்டுள்ளார். (இ-3)

# பல கட்சி ஆட்சிமுறை நாட்டுக்கு உதவாதாம்

## பேராசிரியர் ஆரியபாலா கூறுகிறார்

கண்டி, ஒக். 15

இந்த நாடும் இந்த நாட்டின் பௌத்த சாசனமும் பாதுகாக்கப்பட வேண்டுமானால் பல கட்சி ஆட்சி முறை ஒழிக்கப்பட்டு அதற்குப் பதிலாக முன்னாள் பிரதமர் எஸ். டபிள்யூ. ஆர். டி பண்டாரநாயக்காவால் சட்டசபை காலத்தில் பிரேரிக்கப்பட்ட நிறைவேற்று சபை முறை கொண்டுவரப்பட வேண்டும்.

இப்படி முன்னாள் பேராசிரியர் கலாநிதி ஆரியபாலா தெரிவித்தார்.

சிங்கள மொழிக்கும், பௌத்த மதத்துக்கும் ஆற்றிய சேவைக்காக தம்மைக் கௌரவிக்க நடைபெற்ற கூட்டத்திலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். (இ-10)

## ஜி. சீ.ஈ. (சா. த.) பரீட்சை டிச. 11 இல்

ஜி. சீ. ஈ. (சாதாரணதர) பரீட்சை எதிர்வரும் டிசம்பர் மாதம் 11 ஆம் திகதி ஆரம்பமாகும் எனத் தெரிவிக்கப்பட்டது.

பாடசாலை மாணவர்கள், தனிப்பட்ட பரீட்சார்த்திகள் உட்பட சுமார் ஐந்து லட்சத்து 81 ஆயிரத்துக்கும் அதிகமானவர்கள் இப்பரீட்சைக்குத் தோற்றுவார்கள். (இ-111)

# வடபகுதி மீனவர்களுக்கு உலர் உணவு நிவாரணம்

வட மாகாணத்தில் கடல் வலயத் தடையாலும், யுத்த சூழ்நிலைகளினாலும் பாதிக்கப்பட்டுள்ள மீனவர்களுக்கு உலர் உணவு வழங்குமாறு அரசாங்கம் உத்தரவு பிறப்பித்துள்ளது என்று வடமாகாணத்துக்கான புனர்வாழ்வு, புனரமைப்பு அதிகார சபை அதிகாரி தெரிவித்தார்.

யுத்த சூழ்நிலைகளினால் மன்னார், முல்லைத்தீவு, யாழ்ப்பாணம், கிளிநொச்சி ஆகிய மாவட்டங்களில் ஆயிரக்கணக்கான மீனவக் குடும்பங்கள் மிகவும் பாதிப்படைந்துள்ளதுடன் ஆயிரக்கணக்கான குடும்பங்கள் இடம் பெயர்ந்துமுள்ளன. (இ-3-51)

## அராலியில் ஆயுள்வேத வைத்தியசாலை

அராலி ஆயுள்வேத வைத்திய சாலை நாளை 16 ஆம் திகதி அராலி உப அலுவலக அறையில் ஆரம்பித்து வைக்கப்படவுள்ளது. (இ-145)

# மாவட்டம் தோறும் விளையாட்டு மைதானம்

## ஏழரைக் கோடி ஒதுக்கீடு

வலிகாமம் தெற்குஒக்.15

வடக்கு—கிழக்கு மாகாணத்தின் விளையாட்டுத்துறையினை அபிவிருத்தி செய்யும் திட்டத்தின் கீழ் இம் மாகாணத்திலுள்ள ஒவ்வொரு மாவட்டத்திலும் [illegible]ண்டதூர ஓட்டப்போட்டிகள் நடத்துவதற்கு ஏற்ற வகையில் விளையாட்டு மைதானங்கள் அமைக்கப்பட உள்ளன.

வடக்கு — கிழக்கில் விளையாட்டுத்துறையை ஊக்குவிக்கவும், அபிவிருத்தி செய்யவும் பல்வேறு செயற் திட்டங்களை மேற்கொள்ள வடக்கு —கிழக்கு மாகாண விளையாட்டுத் துறை அமைச்சின் உதவிப் பணிப்பாளர் திரு. ஏ. எஸ் குணரட்ணம் நடவடிக்கை எடுத்து வருகின்றார்.

இப்பகுதிகளில் உள்ள பிரதேச செயலர் பிரிவுகள் தோறும் 200 மீற்றர் ஓட்டப்பாதை கொண்ட மைதானங்களை அமைக்கவும், கிராமப்புறங்களில் மேசைப் பந்தாட்ட விளையாட்டை ஊக்குவிக்கும் முகமாக பந்துகளும், மேசைகளும் வழங்கவும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது

இத்திட்டங்களைச் செயற்படுத்தவென வடக்கு-கிழக்கு மாகாண விளையாட்டுத் துறை அமைச்சு ஏழரைக் கோடி ரூபாவினை ஒதுக்கீடு செய்துள்ளதாகவும் தெரிய வருகின்றது. (இ-152)

### நாளை

புரட்டாதி 30
புதன்கிழமை
திதி: சதுர்த்தி
மாலை5 45 வரை.
நட்சத்திரம்: அனுஷம்
பிற்பகல் 4 45 வரை.
சதுர்த்தி விரதம்
ராகுகாலம்: 12.02—1 32
சுபநேரம்: 4.32—6.02
(பகலுக்கும் இரவுக்கும் பழைய நேரப்படி)

# நிலங்களைப் பண்படுத்தும் வேலையில் விவசாயிகள்

## மழையை அடுத்து சுறுசுறுப்பு

வலி.தென்.மேற்கு ஒக். 15

சமீப நாள்களாக பெய்து வரும் மழையை அடுத்து விவசாயிகள் நிலங்களைப் பண்படுத்த ஆரம்பித்துள்ளனர்.

வலிகாமம் தென் மேற்குப் பகுதியில் செய்கை பண்ணப்படாமல் இருந்த பல ஏக்கர் நிலங்கள் டிராக்டர்களாலும், மாடுகளாலும் உழவு செய்யப்படுகின்றன.

ஏற்கனவே விதைக்கப்பட்ட நிலங்கள் போக மீதி ஏராளமான ஏக்கர்களைக் கொண்ட வயல் நிலங்கள் நெற்செய்கைக்கெனப் பண்படுத்தப்படுகின்றன.

கப்பலில் ஏற்றி வரப்படும் விதை நெல்லை நம்பியே இந்த நிலங்கள் பண்படுத்தப்படுவதாக கமநல சேவை நிலையத்தைச் சேர்ந்த அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

### தென்மராட்சியில்

தென்மராட்சிப் பிரதேசத்தில் பருவ மழை பெய்து வருவதைத் தொடர்ந்து விவசாயிகள் காலபோக நெற்செய்கையில் முனைப்புடன் ஈடுபட்டு வருகின்றனர். எனினும் விவசாயிகள் விதை நெல்லைப்பெற மிகுந்த சிரமப்பட்டு வருகின்றனர்.

கமநல சேவை நிலையத்தினூடாக விதை நெல் வழங்கப்படவுள்ளதாக தெரிவிக்கப்பட்டபோதிலும் இதுவரை விவசாயிகளுக்கு அது வழங்கப்படவில்லை.

இவ்வாறான தடங்கல்களால் விவசாயிகள் 45 சதவீத வயல் நிலங்களிலேயே நெல் விதைத்துள்ளனர் என தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை நெல் விதைக்கும்போது இடப்படும் அடி உரம் இல்லாததால் விவசாயிகள் நெல்லைத் தனித்தே விதைத்து வருகின்றனர்.

சிலர் உரத்துக்குப் பதிலாக தேங்காய்ப் பிண்ணாக்கை வயலில் வீசி வருகின்றனர். அத்துடன் இயற்கைப் பசளைகளையும், எரு வகைகளையும் இட்டு வருகின்றனர். (இ-31-145)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமாதான பேச்சு நடத்தும் எண்ணம் அரசுக்கில்லை

## குமார் பொன்னம்பலம் தெரிவிப்பு

கொழும்பு, ஒக். 15

விடுதலைப் புலிகளுடன் சமாதானப் பேச்சு நடத்தும் எண்ணம் அரசாங்கத்துக்குக் கிடையாது போல் இருக்கிறது. அப்படியான எண்ணம் இல்லையானால் இனப் பிரச்சினைக்கு அரசியல் தீர்வு சாத்தியப்படமாட்டாது.

தமிழ் காங்கிரஸ் தலைவர் குமார் பொன்னம்பலம் விடுதலைப் புலிகள் தலைவர் பிரபாகரன் மீதான குற்றப் பத்திரிகைத் தாக்கல் குறித்துக் கருத்துத் தெரிவிக்கையில் மேற்கண்டவாறு கூறினார்.

பி.பி.ஸி. சிங்களச் சேவைக்கு அவர் அளித்த பேட்டியில் மேலும் தெரிவித்திருப்பதாவது:

அரசுக்கு அரசியல் தீர்வு தேவை இல்லை எனில் ஒரே ஒரு தீர்வுதான் உள்ளது; அதுதான் இராணுவத் தீர்வு. இராணுவத் தீர்வு தான் அரசின் முடிவு எனில் தற்போது அரசுக்கு ஆதரவை வழங்கும் தமிழ் கட்சிகள் தங்கள் ஆதரவை அரசுக்குத் தொடர்ந்தும் வழங்கும் என நான் நினைக்கவில்லை.

விடுதலைப் புலிகள் இல்லாமல் தீர்வு காண முடியாது என அக்கட்சிகளே தொடர்ந்தும் கூறிவருகின்றன. எனவே அரசு இந்த நடவடிக்கை எடுத்தது குறித்து நான் மகிழ்ச்சியடைகிறேன். காரணம் அரசின் இந்த முடிவினால் அரச பயங்கரவாதம் வெளிவர வாய்ப்புள்ளது. சிங்கள மக்களின் மனதை வெல்லும் நோக்கிலேயே அரசு செயற்படுகிறது.

இப்படி அவர் கூறினார்.

நவசமசமாஜக் கட்சியின் செயலாளர் கலாநிதி விக்கிரமபாகுகருணாரத்தின கூறியுள்ளதாவது:-

அரசாங்கத்திற்கு விடுதலைப்புலிகளுடன் சமாதானப் பேச்சுகளை நடத்தும் எண்ணம் இருக்குமானால் அதற்கு இந்த நடவடிக்கை எதுவிதத்திலும் உதவப் போவதில்லை.

விடுதலைப் புலிகள் சட்டபூர்வமான பயங்கரவாதிகள் என்ற கதிர்காமரின் கோட்பாட்டை ஒப்புவிக்க இது கட்டாயமாக உதவும்.

விடுதலைப் புலிகளை பயங்கரவாதிகள் என சட்டபூர்வமாக மேற்குலக நாடுகளுக்கு காட்டவேண்டியதற்காக அரசாங்கம்இந்தநடவடிக்கையை மேற்கொண்டிருக்கக் கூடும்

இப்படி அவர் கூறினார்.

(இ-10)

வீடியோ..
(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

சடலங்களையும் படையினர் நேற்று முன்தினம் மந்திகை அரசினர் ஆதார வைத்தியசாலையில் ஒப்படைத்தனர்.

உடுப்பிட்டி மரண விசாரணை அதிகாரி வி. நடராசா இளைஞர்களின் மரணம் குறித்து விசாரணை நடத்தினார்.

விசாரணையின்போது; இரு இளைஞர்களும் கடந்த சனிக்கிழமை இரவுவீடியோப் படம் பார்க்கச்சென்றனர் என்றும்—

மறுநாள் காலையில் அவர்கள் வீடு திரும்பி வரவில்லை என்றும், —

அப்பகுதிக் கிராமசேவை அலுவலர் வந்து, அவர்களின் அடையாள அட்டைகள் உடுப்பிட்டி இராணுவ முகாமில் இருப்பதாகத் தெரிவித்ததாகவும் —

தொடர்ந்து தாம் இராணுவ முகாம் சென்றபோது தமது கணவன்மார் சுடப்பட்டு மரணமான விவரம் தெரிய வந்ததாகவும் — இரு இளைஞர்களின் மனைவிமாரும் தெரிவித்தனர்.

மரணமடைந்த தமது கணவன்மாரை அவர்கள் அடையாளமும் காட்டினர்.

படையினரினதும் மாவட்ட வைத்திய அதிகாரியினதும் சாட்சியங்களை பதிவு செய்து கொண்ட மரண விசாரணை அதிகாரி துப்பாக்கிச் சூட்டினால் ஏற்பட்ட மரணம் எனத் தீர்ப்பளித்தார். (இ-173)

## 3 மாதத்தில் 400 பேருக்கு தொலைபேசி

கொழும்பு ஒக். 15

யாழ்ப்பாணத்தில் அடுத்த மூன்று மாதங்களுக்குள் 400 பேருக்கு நேரடி தொலைபேசி இணைப்புக்களை வழங்க தொலைத் தொடர்பு அமைச்சு நடவடிக்கை எடுத்துள்ளது.

இதற்கான திட்டம் தயாரிக்கப்பட்டிருக்கின்றது.

10 கோடி ரூபா இத்திட்டத்துக்கு ஒதுக்கப்பட்டுள்ளது என்றும் தெரிவிக்கப்பட்டது.

(இ-3)

## 3 கப்பல்களில் 580 பயணிகள்

கொழும்பு, ஒக். 15

திருகோணமலையில் இருந்து 580 பயணிகளை ஏற்றிக்கொண்டு ஞாயிறு மாலை நரேமா, தாரகி, என்டுரன்ஸ் ஆகிய மூன்று சப்பல்களும் யாழ். புறப்பட்டன என்று திருமலை பிரதேச செயலர் வ வேலும்மயிலும் தெரிவித்தார்.

வவுனியாவில் இருந்து வந்த 480 பேரும், திருமலையில் காத்து நின்ற 100 பேரும் பயணிகளில் அடங்குவர் என்றும் தெரிவிக்கப்பட்டது.

(இ-3)

## மேலும் 41 அகதிகள் கைது!

கொழும்பு, ஒக். 15

வடபகுதியில் இருந்து மன்னார் வழியாக இந்தியாவுக்கு அகதிகள் செல்வதற்கு தீவிரம் காட்டிவரும் அதே வேளையில்—

கடற்படையினரும் இதைத் தடுத்து நிறுத்துவதில் தீவிரம் காட்டி வருகின்றார்கள் என்று தெரிவிக்கப்படுகிறது.

கடந்த வெள்ளிக்கிழமை மேலும் 41 அகதிகள் இலங்கைக் கடற்படையினரால் தடுத்து கைது செய்யப்பட்டு மன்னார் நீதிவான் எஸ். திருநாவுக்கரசு முன்னிலையில் ஆஜர் செய்யப்பட்டனர்.

(இ-3)

மத்திய ..
(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

அழைப்பாணை விடுக்கும்.

சந்தேக நபர்கள் அழைப்பாணையைப்பொருட்படுத்தாவிடில், அதன் பின்னர் அவர்களைக் கைது செய்வதற்கான பிடிவிறாந்துகள் பிறப்பிக்கப்படும்.

மத்திய வங்கிக் குண்டு வெடிப்பின் போது சுமார் 90 பேர் கொல்லப்பட்டனர். நூற்றுக்கணக்கானோர் காயமடைந்தனர்.

முன்னாள் இந்தியப் பிரதமர் ராஜீவ் காந்தி கொலை வழக்கிலும் இந்திய நீதிமன்றம் ஒன்றில் பிரபாகரன் மீது ஏற்கனவே குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டது தெரிந்ததே. (இ-3-10)

புலிகளுக்கு...
(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

விடுதலைப் புலிகளுக்கு எதிரான போரில் இலங்கைக்கு உதவும் நோக்கம் எதுவும் கிடையாது என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

(இ-3-4-10)

பளை .,
(2ஆம் பக்கத் தொடர்ச்சி)

மாதங்களில் அனுப்பப்பட்ட ஓய்வூதிய வவுச்சர்களும், காசோலைகளும் கடந்த வாரமே பளைப் பிரதேச செயலகத்திற்குக் கிடைத்ததாகவும் தெரிவிக்கப்பட்டது.

(இ-117)

## ஜெயலலிதா தனித்தனியாக மனுதாக்கல்

சென்னை, ஒக். 15

தமிழக முன்னாள் முதல்வர் ஜெயலலிதா தாக்கல் செய்த ஒட்டுமொத்த முன்பிணை அனுமதி மனுவை சென்னை உயர் நீதிமன்றம் தள்ளுபடி செய்ததை அடுத்து நேற்று தனித்தனியான 7முன்பிணை அனுமதி மனுக்களை ஜெயலலிதா தாக்கல் செய்தார்.

ஜெயலலிதா மீது கலர் தொலைக்காட்சிப் பெட்டி வழங்கியது, தமிழ்நாடு மின்வாரியத்திற்கு நிலக்கரி இறக்குமதி செய்தது, தான்ஸி நிலம் வாங்கியது, வருமானத்திற்கு மிஞ்சிய சொத்துக்கள் சேர்த்திருப்பது, வெளிநாட்டவர்களிடமிருந்து 3 லட்சம் டொலர் பெறுமதியான அன்பளிப்புக்களைப் பெற்றது உள்ளிட்ட 7 வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டுள்ளன.

(இ-10)

தமிழ் - ஆங்கில தட்டச்சு
மற்றும்
றோணியோ வேலைகளுக்கு
அருண்
361, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

மரண அறிவித்தல் 2 ஆம் பக்கத்தில்

# மாகாண சபைகள் கலைப்பு சட்டவிரோதம்

## முன்னைய தீர்ப்பு ஊர்ஜிதம்

கொழும்பு, ஒக். 15

வடமத்திய, சப்பிரகமுவ மாகாண சபைகள் கலைக்கப்பட்டமை சட்ட விரோதமானது என்று கொழும்பு மேன்முறையீட்டு நீதிமன்றம் முன்னர் வழங்கிய தீர்ப்பை உயர் நீதிமன்றம் நேற்று ஊர்ஜிதம் செய்தது.

இவ்வருட முற்பகுதியில் ஜனாதிபதி விடுத்த பணிப்புரையின் பேரில் 2 மாகாண சபைகளின் ஆளுநர்கள் இந்த மாகாணசபைகளைக் கலைத்தனர்.

இதனையடுத்து 2 மாகாண சபைகளின் முதலமைச்சர்களும் சபைகள் கலைக்கப்பட்டது சட்ட விரோதமானது என்று பிரகடனம் செய்யுமாறு மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் மனுத்தாக்கல் செய்திருந்தனர்.

மேன்முறையீட்டு நீதிமன்றம் இந்த மனுக்களை விசாரித்து மாகாணசபைகள் கலைக்கப்பட்டது சட்ட விரோதமானது என்று தீர்ப்பளித்திருந்தது.

இந்தத் தீர்ப்பை ஆட்சேபித்து இரு மாகாண ஆளுநர்களும் உயர் நீதிமன்றத்தில் மனுத்தாக்கல் செய்தனர்.

இந்த மனுவை விசாரித்த மூன்று நீதியரசர்களும் ஏகமனதாக வழங்கிய தீர்ப்பில், அரசமைப்புச் சட்டத்தின் ''155 பி'' பிரிவில் தெரிவிக்கப்பட்டுள்ள பிரமாணங்களின் படியும் ஆளுநர் நடந்து கொள்ள வேண்டும் என்று தெரிவித்தனர்.

சபையின் அங்கீகாரத்துடன் சபை கலைக்கப்படுவதற்கு எதிராக ஆலோசனை கூறும் பட்சத்தில் ஆளுநர் அந்த ஆலோசனையின்படி நடக்க வேண்டும் என்றும் நீதியரசர்கள் தெரிவித்தனர்.

அரசமைப்பு சட்டத்தின்படி சபையின் விருப்பப்படியோ அல்லது ஜனாதிபதியின் உத்தரவின்படியோ ஆளுநர் நடந்து கொள்ள முடியாது என்று இந்த மூன்று நீதியரசர்களில் ஒருவரான நீதியரசர் அமரசிங்கா தெரிவித்தார்.

(இ-3)

## உள்ளூராட்சித் தேர்தல்கள் அடுத்த ஜனவரி இறுதிக்குள்

கொழும்பு, ஒக். 15

உள்ளூராட்சித் தேர்தல்கள் அடுத்த ஜனவரி மாதம் முடிவதற்குள் நடத்தப்படலாம் என்று மிக நம்பகமாக தெரிய வருகின்றது.

இதற்கான அறிவுறுத்தல்கள் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவினால் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி உட்பட பொதுமக்கள் ஐக்கிய முன்னணியில் அங்கம் வகிக்கும் சகல அரசியல் கட்சிகளுக்கும் விடுக்கப்பட்டுள்ளன.

உள்ளூராட்சி சபைத் தேர்தல்களை நடத்தாமல் இரு தடவைகள் ஒத்திவைத்துவிட்டோம்.

மூன்றாவது தடவையும் ஒத்திவைக்க அரசு விரும்பவில்லை.

எனவே அடுத்த ஜனவரி மாத முடிவுக்குள் தேர்தல் நடைபெறவேண்டும்.

இதற்கான சகல நடவடிக்கைகளையும் அரசில் அங்கம் வகிக்கும் கட்சிகள் மேற்கொள்ளவேண்டும்.

இப்படி ஜனாதிபதி கட்சித் தலைவர்களை கேட்டிருப்பதாக தெரியவருகிறது.

(இ-3)

## வவுனியாவிலிருந்துதெற்கே செல்ல புதிய நடைமுறை

வடக்கேயிருந்து தென்னிலங்கைக்கு செல்வோர் வவுனியாவில் பொலீஸாரின் அனுமதி பெற்றவுடன், வவுனியா பொலீஸாரின் கடிதம் ஒன்றையும் தம்முடன் எடுத்துச் செல்ல வேண்டும்.

இக் கடிதத்துடன் குறிப்பிட்ட நபர் தாம் தங்கும் குடியிருப்பாளருடன் தமது பிரிவு பொலீஸ் நிலையம் சென்று அங்கு தம்மைப் பதிவு செய்து கொள்ள வேண்டும்.

இந்த நடைமுறை உடன் அமுலுக்கு வந்துள்ளதாக வவுனியா பொலீஸ் வட்டாரங்கள் தெரிவித்தன.

இதேவேளை— வவுனியாவில் வசிப்பவர்களுக்கு வழங்கப்பட்டுள்ள 3 மாதகால வதிவிட அனுமதிப் பத்திரத்தை நேற்றுமுதல் வவுனியா செயலகத்தில் உள்ள பொலீஸ் நிலையத்தில் புதுப்பித்துக் கொள்ள முடியும் என்று தெரிவிக்கப்பட்டது. (இ-3)

## உத்தரப் பிரதேச முதல்வர் பதவிக்கு மாயாவதி?

உத்தரப் பிரதேசத்தில் மாயாவதி அரசு அமைப்பதற்கு ஐக்கிய முன்னணி ஆதரவு நல்க வேண்டும் என காங்கிரஸ் கட்சி மீண்டும் கேட்டுள்ளது.

காங்கிரஸ் கட்சிக் கூட்டத்தின் பின் காங்கிரஸ் தற்காலிகத் தலைவர் சீதாராம் கேசரி இந்த வேண்டுகோளை விடுத்தார்.

இதேவேளை ஐக்கிய முன்னணி மாயாவதியை ஆதரிக்காவிட்டாலும் மத்தியில் ஐக்கிய முன்னணி அரசுக்கு காங்கிரஸ் கட்சியின் ஆதரவு தொடரும் எனவும் சீதாராம் கேசரி தெளிவுபடுத்தினார்.

பிரபா...
(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

வைத்துக்கொண்டு அவர்கள் மீது நடவடிக்கை எடுத்தால் அவர்களோடு பேச்சு வார்த்தை நடத்துவதற்கான ஒத்துவரக் கூடிய சூழ்நிலை உருவாக மாட்டாது.

ஜனாதிபதி அரசியல் தீர்வுப் பொதிகளைக் கொடுப்பதைப்பார்க்கும்போது அவர் யுத்தத்தில் நம்பிக்கை வைத்திருக்கவில்லை எனத் தெரிகிறது ஆனால் இந்த நடவடிக்கை அதற்கு முரணாக இருக்கிறது என்றார். (இ-3)

புலிகள் . . .
(1 ஆம் பக்கத்தொடர்ச்சி)

யாழ். குடாநாடு விடுவிக்கப்பட்டதும் 4 இலட்சத்து 50 ஆயிரம் பேர் யாழ். வந்து மீளக் குடியமர்ந்துள்ளனர். அவர்கள் இராணுவத்துடன் இணைந்து வாழ்கின்றனர். இந் நிலையில் விடுதலைப் புலிகளை தமிழ் மக்களின் பிரதி நிதிகள் என எவ்வாறு கூறமுடியும் என்றும் அவர் கேட்டார்

இ.-10)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட்டினரால் யாழ்ப்பாணம், நாவலர் வீதி, 292/2 இலக்கத்திலுள்ள அவர்களதுபணிமனையில் 15-10-1996 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org